653

653

KAMALA

TAMIL READER

FOURTH BOOK

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

BY

S. RAMAKRISHNA AVADHANI, M.A., L.T.,
National College High School, Trichinopoly.

AND

Vidvan. M. RAJAMANIKKAM, B.O.L.,
Tamil Pandit Muthialpet High School, Madras.

921

V. K. ARUNACHALAM

TEPPAKULAM P. O., TRICHINOPOLY.

Price As. 6

கமலா தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

ஆக்கியோர் :

S. இராமகிருஷ்ண அவதானி, M.A., L.T.,
நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

494.81186

921

V. K. அருணசலம்

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] 1941 [விலை அணு 6.

முதற் பதிப்பு 1941

திருந்திய பதிப்பு ,,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

முகவுரை

கமலா தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்ட இந்நூல் வரிசை, அரசியலார் அண்மையில் 1939-ல் வெளியிட்ட **பாட இயலை** அடிப்படையாகக் கொண்டது. அப்பாட இயலில் காணப்பெறும் **குறிப்புகள் அனைத்தும்** இவ்வரிசையில் கைக்கொள்ளப்பட்டுள்ளன. சைக்கிள், மோட்டார், பெட்ரோல் போன்ற பல ஆங்கிலச் சொற்கள் பேச்சு மொழியிற் கலந்துவிட்டமையாலும், அவற்றுக்கென்று புதிதாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் சிறு பிள்ளைகட்கு விளங்குதல் அரிதாதலாலும், வேறு வழியின்றி, அவசியமான ஆங்கிலச் சொற்கள் இடையிடையே பெய்துரைக்கப்பட்டுள்ளன. அபிநயப் பாடல்கள், நாடகங்கள், உரையாடல்கள், கதைப் படங்கள், எளிய முறையிற் கற்பிக்கும் இலக்கணப் பகுதிகள், சிறுவர்க்கேற்ற சிறந்த கட்டுரைப் பகுதிகள், மௌனவாசிப்புக்கு உரிய பாடங்கள் முதலியன இவ்வரிசையிற் சிறப்பிடம் பெற்றுள்ளன. இந்நூல் வரிசை மாணவர் உலகில் சிறப்புறும் என்று நம்புகிறோம்.

921

S. இராமகிருஷ்ண அவதானி

மா. இராசமாணிக்கம்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	நமது நாட்டு அரசியல்	...	1
2.	காவிரியாறு	...	5
3.	பொய் சொன்ன சிறுவன்	...	9
4.	மஹாபலிபுரம்	...	12
5.	விளையாட்டுத் துப்பாக்கி	...	15
6.	கிராமக் கைத்தொழில்கள்—I	...	19
7.	கிராமக் கைத்தொழில்கள்—II	...	20
8.	வீட்டுச் சுத்தம்	...	23
9.	'தலைதனைக் கொண்டு போம்.'	...	26
10.	ஆறு	...	29
11.	நீதி மன்றங்கள்	...	30
12.	சாரணச் சிறுவர்கள்	...	33
13.	பயிர்த்தொழில்	...	37
14.	வரவுக்குமேல் செலவு	...	42
15.	தேயிலை	...	45
16.	ஆபத்தில் உதவி	...	49
17.	உடற்பயிற்சி	...	51
18.	கள்வனை ஏமாற்றிய கந்தன்	...	54
19.	நிலக்கரியும் மண் எண்ணெயும்	...	58
20.	எனது வேலை	...	62

எண்	பொருள்	பக்கம்
21.	பச்சையப்ப முதலியார்	... 65
22.	கதைப் படம்	... 70
23.	பட்டுத் தொழில்	... 72
24.	வேலனும் வீட்டு வேலையும்	... 75
25.	வரி வசூல்	... 78
26.	கடிதம் எழுதும் முறை	... 82
27.	போர்வீரரின் இராஜபக்தி	... 85
28.	மாணவரும் சுகாதாரமும்	... 88
29.	கிராம வாழ்க்கையும் நகர வாழ்க்கையும்	... 93
30.	சுவர்க்க லோக சந்நியாசி	... 97

செய்யுட் பகுதி

I.	வாக்குண்டாம்	... 101
II.	நல்வழி	... 103
III.	கண்ணகி	... 105
IV.	ஆட்டப் பாடல்கள்	... 108

ஆறும் ஜார்ஜ்

கமலா தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

1. நமது நாட்டு அரசியல்

ஆரும் ஜார்ஜ்	காலம் சென்ற	குடியேற்ற
பேரன்பு	இராணியார்	விக்டோரியா
எட்வர்டு	பரம்பரையினர்	தந்தித்தபால்
பெற்றுள்ளோம்	அங்கிருந்து	தேர்ந்தெடுக்கப்பட்ட

இப்பொழுது நம்மை ஆளும் அரசர் ஆரும் ஜார்ஜ் மன்னர். இவர் காலம் சென்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் இளைய புதல்வர். இவர் பிரிட்டிஷ் தீவுகளை யும் குடி ஏற்ற நாடுகளையும் நமது இந்தியாவையும் ஆண்டுவருகிறார். இவர் முன்னோரும் இவரும் குடிக ளிடம் பேரன்பு கொண்டவர்.

இந்தியாவை ஆண்ட முதல் இராணியார் விக் டோரியா என்பவர். அவருக்குப் பின் அவர் மகனார் ஏழாம் எட்வர்டு என்பவர் நம்மை ஆண்டார். அவ ருக்குப்பின் அவர் மைந்தர் ஐந்தாம் ஜார்ஜ் என்பவர் நம் அரசராய் இருந்தார். இப்போது அவர் மைந்தர் ஆரும் ஜார்ஜ் என்பவர் நமது அரசராயிருக்கிறார்.

இவ்வரச பரம்பரையினரால் நமது நாடு அடைந்த நன்மைகள் பல. போக்கு வரவுக்கு உரிய

இரயில் வசதிகள், தந்தித் தபால் வசதிகள், சுகாதார வசதிகள், கல்வி, அயல் நாட்டாருடன் வியாபார வசதி முதலிய நலங்கள் இவ்வரசாங்கத்தால் நாம் பெற்றுள்ளோம்.

நம் மன்னர் ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள தமது தேசத்தில் இருந்துகொண்டே நம்மை ஆள்வது உங்களுக்கு வியப்பை உண்டாக்கும் அல்லவா? அவர் தம்முடைய பிரதிநிதியாக ஒருவரை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளார். அவரே வைஸ்ராய் என்பவர். அவர் நமது தேசத்துக்கு டில்லியைத் தலைநகராகக்கொண்டு அங்கிருந்து நம்மை ஆண்டு வருகிறார். அவர் ஒருவரே இப்பெரிய தேசத்தை ஆள முடியாது அல்லவா? அதனால், நமது தேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணத்தையும் ஒவ்வொரு கவர்னர் ஆண்டுவருகிறார். அவருக்கு உதவியாக மந்திரிகளும் சட்ட சபையும் உண்டு. சட்டசபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த அறிவாளிகள் இருந்து குடிகளுக்கு நன்மையைத் தரும் சட்டங்களைச் செய்கிறார்கள்.

இந்த மாகாணச் சட்ட சபைகள் அல்லாமல் வைஸ்ராய்க்கு உதவியாக இந்திய சட்டசபை என்பது ஒன்று உண்டு. அதில், எல்லா மாகாணங்களில் இருந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவாளிகள் கூடி இருந்து, நமது தேசம் முழுவதுக்கும் நன்மையைத் தரத்தக்க சட்டங்களைச் செய்கிறார்கள். அச்

சட்டங்களை அமுலில் கொண்டுவந்து கவனிப்பதற்கும் வைஸ்ராய்க்குத் தக்க ஆலோசனைகளைக் கூறுவதற்கும் சில மந்திரிகள் இருக்கிறார்கள்.

இவ்வாறு நமது நாட்டு அரசியல் செவ்வையாய் நடைபெற்று வருகின்றது. இங்கிலாந்தில் உள்ள பார்லிமெண்டு என்னும் சட்ட சபையில் உள்ளவர் உண்டாக்கும் அரசியல் முறைப்படியே நமது நாட்டு அரசாட்சி நடக்கிறது என்பதையும் நீங்கள் நினைவில் வைத்தல் வேண்டும்.

இந்திய சக்கரவர்த்திகள்

விக்டோரியா மகாராணியார் 1858 முதல் 1901 வரை.

ஏழாம் எட்வர்டு மன்னர் 1901 முதல் 1910 வரை.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 1911 முதல் 1936 வரை.

ஆறாம் ஜார்ஜ் மன்னர் 1936 (முதல் படத்தில் இருப்பவர்.)

கேள்விகள்

1. நமது நாட்டு அரசியல் எப்படி நடைபெறுகிறது?
2. நமது மாகாண அரசியல் எப்படி நடக்கிறது?
3. நம் அரசராக இருந்தவர் யாவர்? இன்று இருக்கின்றவர் யாவர்?

பயிற்சி

1. பரம்பரை, அமுல், இராணியார், அங்கிருந்து, பேரன்பு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை:-
   1. நம்மை ஆள்பவர் —— —— மன்னர்.
   2. தம்மை —— விக்டோரியா ——.

3. மந்திரிகள் இருக்கிறார்கள், கவர்னர் ஆள்கிறார், சட்டசபை ஒன்று உண்டு.—கேள்விகளாக மாற்று

4. **அரசர் நம்மை ஆள்கிறார்.**—இந்தவாக்கியத்தில்

i **ஆள்கிறார்** — என்பது **வினைமுற்று** (முடிந்தபொருளைத்தரும் வினைச்சொல்).

ii **யார்** ஆள்கிறார்? என்று கேள்விகேட்டால், ‘**அரசர்**’ என்று பதில் கிடைக்கிறது. எனவே, **அரசர்** — என்பது **எழுவாய்** (வினை செய்யும் கர்த்தா).

iii **யாரை** ஆள்கிறார்?—என்று கேள்வி கேட்டால், ‘நம்மை’ என்பது பதில் ஆகும். எனவே, **நம்மை** என்பது **செயப்படுபொருள்** எனப்படும் (வினையை அடைந்த பொருள்). எனவே, மேல் சொன்ன வாக்கியத்தில்,

அரசர் — எழுவாய்

ஆள்கிறார் — பயனிலை

நம்மை — செயப்படு பொருள்.

இந்த அறிவைக்கொண்டு, கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. கூறுக.

(1) கண்ணன் வெண்ணெய் உண்டான். (2) மாமி ‘காப்பி’ குடித்தாள். (3) மங்கை மாலைகட்டுகிறாள். (4) பங்கஜம் பந்து ஆடுகிறாள்.



2. காவிரியாறு

சிறப்பற்ற	காவிரி	உபநதி	தக்ஷிணகங்கை
கிளைநதி	குடகுநாடு	பிரமகிரி	தலைக்காவிரி
உற்பத்தி	மலைச்சாரல்	சமவெளி	நெடுந்தூரம்
மைசூர்	சிற்றாறு	ஸ்ரீரங்கம்	காவிரிப்பூம்பட்டிணம்
திருவையாறு	தோற்றம்	பவானி	வங்காளக்குடாக்கடல்
அமராவதி	கொள்ளிடம்	வெட்டாறு	வெண்ணாறு
அரிசிலாறு	குடமுருட்டி	வடவாறு	கண்ணம்பாடி
வீரசோழன்	நீர்ப்பெருக்கு	தெளியலாம்	முடிகொண்டான்
திருமலைராயன்	பொன்னி	செவிலித்தாய்	அணிகலன்கள்

தமிழ் நாட்டில் சிறப்புற்ற ஆறு காவிரி ஒன்று தான். அது தக்ஷிண கங்கை என்னும் பெயர் உடையது. அதற்கு உபநதிகள் பல உண்டு; கிளை நதிகளும் பல உண்டு.

காவிரியாறு குடகு நாட்டில் பிரமகிரி மலைத் தொடரில் உற்பத்தியாகிறது; ஆகி, ஒரு சிறு ஓடையாகச்சென்று, சிறிது தூரம் பாய்கிறது. அந்த இடத்திற்குத் தலைக்காவேரி என்பது பெயர். பின்பு, காவிரி அங்கிருந்து குடகு மலைச்சாரலில் சிறிது தூரஞ் சென்று, பிறகு மைசூர்ச் சமவெளியில் பாய்கிறது. இவ்வாறு பாய்ந்து மீண்டும் மலை நடுவே மறைந்து நெடுந்தூரம் ஓடுகிறது; ஓடித் தமிழ் நாட்டில் பாய்கிறது; பாய்ந்து, பல கிளை நதிகளாகப் பிரிந்து, முடிவில் காவிரிப்பூம்பட்டினம் என்னுமிடத்தில் வங்காளக் குடாக் கடலில் கலந்துவிடுகிறது.

காவிரியாறு அதன் உற்பத்தி ஸ்தானத்தில் மிகச் சிறியது என்று முன் சொன்னோம் அல்லவா? ஆனால், அது பாயும் வழியில் வேறு பல ஓடைகளும் சிற்றாறுகளும் வந்து கலத்தலால், திடீரெனப் பெரிய ஆறாகித் தோன்றுகின்றது. உதாரணமாக ஸ்ரீரங்கத்திற்கு அருகிலும் திருவையாற்றுக்கு அருகிலும் அதன் பரந்த தோற்றம் நன்றாய்க் காணலாம்.

காவிரியாற்றின் உப நதிகளுள் சிறந்தவை பவானி, அமராவதி என்பன; கிளை நதிகளுள் சிறந்தவை கொள்ளிடம், வெட்டாறு, வெண்ணாறு, அரிசிலாறு, குடமுருட்டி, வடவாறு என்பன. இவற்றுள் மிகப் பெரியது கொள்ளிடமே. இவ் வுண்மையைக் கொள்ளிடம் என்னும் புகைவண்டி நிலையத்திற்கு அருகில் கொள்ளிடத்தின் தோற்றத்தினைக் கண்டு தெளியலாம்.

காவிரியாற்றினின்றும் இயற்கையாகவே பிரியும் மேற்கூறிய கிளைநதிகள் அல்லாமல், சோழ அரசர்களால் வெட்டப்பட்ட கிளை ஆறுகள் சில உண்டு. அவற்றுள் முடிகொண்டான், வீரசோழன், திருமலைராயன் என்பவை சிறந்தவை. அவை அவற்றை உண்டாக்கிய அரசர்களின் பெயர்களைக் கொண்டவை.

காவிரியின் நீர்ப்பெருக்கைச் சோழ மன்னர்கள் நன்கு பயன்படுத்தினார்கள்; காவிரியின் குறுக்கே பல அணைகள் கட்டி, நீரைப் பகிர்ந்து நான்கு பக்கங்களிலும் பாயச் செய்தார்கள்; இவ்வாறு அவர்கள் கட்டிய அணைகளில் மிகச் சிறந்தது கிராண்டு அணைக்கட்டு என்பது. அது திருச்சிராப்பள்ளிக்குக் கிழக்கே சுமார் 10 மைல் தூரத்தில் உள்ளது. இப்போதுள்ள நமது அரசாங்கத்தார் கொள்ளிடம் பிரியுமிடத்தில் ஒரு சிறிய அணையையும் அடைப்பையும் கட்டி, காவிரிக்கு வேண்டும் நீரைப் பிரித்து விடுகின்றனர். மைசூர் அரசாங்கத்தார் தமிழ் நாட்டில் கண்ணம்பாடி என்னும் இடத்தில் அணைக்கட்டு ஒன்றைக் கட்டி, காவிரி நீரைத் தேக்கிப் பாயச் செய்கின்றனர்.

ஆண்டுதோறும் ஆடி மாதம் 18-ஆம் நாளில் காவிரியில் வெள்ளம் தோன்றும். அந்நாளைப் பதினெட்டாம் பெருக்கு என்று தமிழர் கூறுவர். அந்த நாளில் பெண்கள் நீராடிச் சிறந்த ஆடை அணிகலன்களைத் தாங்கி, காவிரி ஆற்றைப் பூசிப்பர்; வாழைப் பட்டைகளில் நெய்விளக்கு ஏற்றி ஆற்றில் மிதக்க

விடுவர்; ஆற்றின் கரையில் சுவையுள்ள உணவுப் பொருள்களை யாவரும் உண்டு மகிழ்வர். காவிரி யாற்றைச் 'செவிலித்தாய்,' 'பொன்னி' என்று பல வாறு தமிழ்ப் புலவர் பாராட்டிப் பாடியுள்ளனர்.

கேள்விகள்

1. காவிரியாறு எங்குத் தோன்றுகிறது? எங்கெங்குப் பாய்கிறது?
2. அதன் உபநதிகள் எவை? கிளையாறுகள் எவை?
3. அரசர்கள் வெட்டிய ஆறுகள் எவை?
4. காவிரியில் உள்ள அணைக்கட்டுகள் எவை?
5. பதினெட்டாம் பெருக்கு என்றால் என்ன?
6. காவிரிக்கு உரிய வேறு பெயர்கள் எவை?

பயிற்சி

1. நீ கண்ட ஆற்றைப்பற்றி 10 வரிகளில் எழுது.
2. காவிரி யாற்றைப்பற்றி சுருக்கிக் கூறு.
3. ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்புக் கொடு.
4. காவிரியின் உற்பத்தி—பாய்ச்சல்—உப, கிளை நதிகள்—அணைக்கட்டுகள்—உபயோகம் : இக் குறிப்புகளைக் கொண்டு சிறு கட்டுரை எழுது.
5. 2-ஆம் பாராவில் உள்ள வாக்கியங்களில் இருக்கும் எ. ப. செ. கூறு.
6. 3-ஆம் பாராவில் உள்ள வினைமுற்றுகளைச் சொல்.

3. பொய் சொன்ன சிறுவன்

வீரநாதம் பிரபு	நீலாம்பிகை	நீலகாந்தன்	சாம்பல்
வெளுத்து	நீர்த்துளி	திருமகன்	குற்றத்தை
சகிக்க வில்லை	அடிகளில்	மன்னிப்பு	இறைவரே
இம்முறை	தொழுதான்	அருங்குணம்	இருப்பாயாக.

சென்னையில் வீரநாதம் பிரபு என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியின் பெயர் நீலாம்பிகை. அவ்விருவருக்கும் மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நீல காந்தன்.

நீல காந்தன் மிகவும் நல்ல பையன். அவன் ஒரு நாள் பொய் ஒன்றைச் சொன்னான். நீலாம்பிகை, தன் அருமைத் திருமகன் பொய் பேசியதைக் கேட்டாள். அவளுக்கு அடக்க முடியாத வருத்தம் உண்டானது. அவளது முகம் சாம்பல் போல வெளுத்துவிட்டது. அவள் ஓர் இடத்தில் உட்கார்ந்தாள். அவள் கண் களில் நீர்த்துளிகள் துளித்தன. தன் அருமைத் திரு மகன் மிகவும் நல்லவனாய் இருந்தும், பொய் சொன் னது அவளுக்குப் பிடிக்கவில்லை.

தான் பொய் பேசியதற்காகத் தன் தாய் வருந்து வதை நீல காந்தன் கண்டான். அவன் அப்போது தான் தன் குற்றத்தை உணர்ந்தான். அவன், தன் தாய் வருந்துவதைக் காணச் சகிக்கவில்லை; 'ஓ' என்று அலறினான்.

பின்னர், அவன் நேரே தன் தாயிடம் ஓடினான். அவன் அழுதுகொண்டே, "அம்மா, நான் பெரிய

பாவத்தைச் செய்துவிட்டேன்! இனி, நான் பொய் சொல்லமாட்டேன். என் அருமைத் தாயே, இம்முறை மன்னித்துவிடு," என்று கூறி அவள் அடிகளில் வீழ்ந்தான்.

தாய் தன் அருமைத் திருமகனைப் பார்த்தாள்; "தம்பி, நீ குற்றவாளி; ஆதலால், உனது குற்றத்தைக் கடவுளிடம் கூறி மன்னிப்புப் பெற்றுக்கொள். 'இனி, பொய் சொல்வதில்லை,' என்று கடவுளிடம் கூறு," என்றாள்.

நீல காந்தன் கைகளைக் குவித்து, "தந்தையீர், என்னைப் படைத்த இறைவரே! நான் அறியாமல் பொய் பேசினேன். நீர் இம்முறை என்னை மன்னிக்க வேண்டும். இனி, எக்காலத்தும் பொய் பேசேன்," என்று கூறித் தொழுதான்.

அப்போது அவன் கண்களில் இருந்து நீர் பெருகியது. அன்று முதல் நீல காந்தன் பொய் சொல்லவே இல்லை. அவனது அருங்குணத்தைக் கண்ட தாய், அவனை அன்போடு அணைத்துக் கொண்டாள். தம்பி, நீயும் நீல காந்தனைப் போல நல்ல பிள்ளையாக இருப்பாயாக.

கேள்விகள்

1. நீலகாந்தன் செய்த தவறு யாது?
2. அவன் தாய் என்ன சொன்னாள்?
3. அவள் சொற்படி அவன் என்ன செய்தான்?
4. நீ இக்கதையால் அறிவது யாது?

பயிற்சி

1. திருமகன், அடிகளில், மன்னிப்பு, இம்முறை, அருங்குணம்-இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப்படி.

2. இரண்டாம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

3. மூன்ரும் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைச் சொல்.

4. நான்காம் பாராவில் உள்ள வினைமுற்றுகளைக் கூறு.

5. ?—இது **கேள்விக் குறி**; கேள்விப் பொருளையுடைய வாக்கியத்தின் கடைசியில் இடவேண்டுவது.

(உ-ம்) அவன் வந்தானு? ஆம், அவன் வந்தான்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் தக்க இடங்களில் தக்க குறிகளை இடு :—

(1) அவன் போனுை (2) அவன் எங்கே போனுன்

(3) அவள் பாடினுள் (4) எவள் பாடினுள்

4. மஹாபலிபுரம்

காணப்படும்	இரதங்கள்	ஏறக்குறைய	மூந்நூறு
செங்கற்பட்டு	மஹாபலிபுரம்	பல்லவர்	தொண்டைமண்டலம்
நிலப்பரப்பு	ஆற்காடு	காஞ்சிபுரம்	வேலைப்பாடு
பாறை	சிற்பம்	வெறும்பாறை	பொறிப்பது
வல்லவர்	துறைமுகம்	பட்டினம்.	

பிள்ளைகளே, படத்தில் காணப்படும் இரதங்கள் ஏறக்குறைய ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகளுக்குமுன் செய்யப்பட்டவை என்பதை நீங்கள் அறிதல் வேண்டும். இவை செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள மஹாபலிபுரம் என்னும் இடத்தில் உள்ளவை. இவை பல்லவர்கள் என்னும் ஒரு வகுப்பு அரசர்களால் செய்யப்பட்டவை.

பல்லவர்கள் தொண்டை மண்டலம் என்னும் நிலப்பரப்பை ஆண்டுவந்தவர்கள். தென் ஆற்காடு வட ஆற்காடு செங்கற்பட்டு என்னும் மூன்று ஜில்லாக்

கள் அடங்கிய நிலப்பரப்பிற்குத்தொண்டைமண்டலம் என்பது பெயர். அதன் தலைநகரம் காஞ்சிபுரம் என்பது. பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் சிறந்த கோவில்களைக் கட்டியுள்ளார்கள். அக்கோவில்களில் உள்ள வேலைப்பாட்டைவிட மஹாபலிபுரத்தில் உள்ள இரதங்களில் காணப்படும் வேலைப்பாடு சிறந்தது. ஒவ்வோர் இரதமும் ஒவ்வொரு பாறையைத் துளைத்துச் செய்யப்பட்டதாகும். இவற்றுள் நான்கு இரதங்கள் ஒரு வரிசையாகவும், ஐந்தாம் இரதம் சிறிது தூரத்திலும் இருக்கின்றன. இந்த இரதங்களின் ஒவ்வொரு பாகமும் சிற்ப வேலைப்பாடு அமைந்தது.

பெரும்பாறைகளைத் துளைத்து இத்தகைய இரதங்களை அமைப்பது எளிதான காரியமா? இல்லை. வெறும்பாறைகளை இத்தகைய அழகிய இரதங்களாகச் செய்துமுடிக்க நம்முன்னோர் எவ்வளவு பாடுபட்டு இருக்கவேண்டும்! இவற்றில் காணும் சித்திரங்களாலும் சிற்பவேலைகளாலும் நாம் தெரிந்துகொள்வது யாது? நம் முன்னோர் சிறந்த சித்திரங்களைப் பொறிப்பதில் வல்லவராய் இருந்தனர்; சிற்ப வேலையில் சிறந்து இருந்தனர்; பாறைகளையும் துளைக்கும் சக்திபெற்று இருந்தனர் என்னும் அரிய செய்திகளை நாம் இவற்றால் அறிந்துகொள்ளுகிறோம்.

மஹாபலிபுரம் கடற்கரையில் இருக்கின்ற இடமாகும். அது பல்லவர்கள் காலத்தில் பெரிய நகரமாக இருந்திருத்தல் வேண்டும். அங்குக் கப்பல்கள்

வெளி நாட்டுப் பண்டங்களைக் கொண்டுவந்து குவித்தன; உள் நாட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வெளி நாடுகளுக்குச் சென்றன. பல்லவர் காலத்தில் மஹாபலிபுரம் சிறந்த துறைமுகப்பட்டினமாய் விளங்கினது என்னும் அரிய செய்திகளை நம் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய சிறப்புப்பொருந்திய மஹாபலிபுரம் இப்பொழுது ஒரு சிறிய கிராமமாய் இருக்கின்றது. ஆயினும், இன்றும் அங்குள்ள இரதங்கள் பல்லவ அரசர்களையும் நம் முன்னோர்களின் உழைப்பையும் சிற்பத் திறமையையும் நமக்கு நினைப்பு ஊட்டுவன போல நின்று இருக்கும் காட்சி கண்டு களிக்கத் தக்கது.

கேள்விகள்

1. பல்லவர்கள் யார்?
2. காஞ்சிபுரம், மஹாபலிபுரம் என்பன யாவை? அவை பற்றிய விசேஷம் என்ன?
3. நம் முன்னோர் பெருமை யாது?
4. பழைய மஹாபலிபுரம் எப்படி இருந்தது?

பயிற்சி

1. ஏறக்குறைய, நிலப்பரப்பு, வேலைப்பாடு, துறைமுகம் - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. மஹாபலிபுரம் இரதங்களைப் பற்றி 10 வரிகள் எழுது.

3. காஞ்சிபுரத்தைப்பற்றி 6 வாக்கியங்கள் எழுது.
4. இரண்டாம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
5. மூன்றும் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களை யும் வினைமுற்றுகளையும் கூறு.
6. நான்காம் பாராவில் உள்ள ஒருமை-பன்மை களைக் கூறு.
7. ஒவ்வொரு பாராவையும் படித்துத் தலைப்புக் கொடு.
8. இப்பாடத்தை மௌனமாகப் படித்துச் சுருக்கி எழுது.
9. அவன் வந்து போனன் | அவன் எங்குப் போனன் | அது ஓடி விட்டதா | இது பார்க்கிறது | —நேர்க்கோடுகள் உள்ள இடத்தில் தக்க குறி களை இடு.

---

5. விளையாட்டுத் துப்பாக்கி

இலட்சுமணன்	**சகோதரர்**	**அறிந்திருந்தார்கள்**
கோவூர்	**வியாபாரி**	**பணக்காரர்**
சிங்கம்	**துப்பாக்கி**	**விழித்துக்கொள்**
முட்டையாக	**வெளிப்புறம்**	**போலீஸ் ஸ்டேஷன்**

இராமனும் இலட்சுமணனும் சகோதரர் ஆவர். அவர்கள் முறையே ஏழாம் வகுப்பிலும் ஆறும் வகுப் பிலும் படித்து வந்தார்கள். அவர்கள், சாரணச் சிறு வர்கள் பலவாறு கத்துவதைப்போலக் கத்துவதற்கு அறிந்திருந்தார்கள். அவர்கள் பயம் என்பதைச் சிறி தும் அறியாதவர்கள்.

அவர்கள் தகப்பனுர் கோவூரில் பெரிய வியாபாரி; பெரிய பணக்காரர். அவ்வூரில் திருடர் பயம் அதிகம் இதனை இராமனும் இலட்சுமணனும் அறிந்தனர். அவர்கள், 'திருடர்கள் நம் வீட்டுக்குள் வந்தால், நாம் சிங்கத்தைப் போலக் கத்தி, அவர்களை விரட்டிவிட லாம்,' என்று பேசிக் கொண்டார்கள்.

ஒரு நாள் அச்சிறுவர்களுடைய மாமனுர் அவர் கள் வீட்டுக்கு வந்தார். அவர் பட்டணத்தில் இருந்து இரண்டு விளையாட்டுத் துப்பாக்கிகளை வாங்கிக்கொண்டு வந்தார். அவர் அவற்றை இராமனுக்கும் இலட்சு மணனுக்கும் கொடுத்தார். அச்சிறுவர்கள் அந்தத் துப்பாக்கிகளை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டார்கள்.

ஓர் இரவு சிறுவர் இருவரும் திருடரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து, தூங்கிவிட்டனர். சுமார் இரண்டு மணி இருக்கும். இராமன் ஏதோ சத்தம் கேட்டுத் திடீரென விழித்துக்கொண்டான். அவன் உடனே இலட்சுமணனை மெதுவாக எழுப்பித், திருடர் வீட்டினுள் வந்திருப்பதைத் தெரிவித்தான்.

உடனே இருவரும் கையில் விளையாட்டுத் துப் பாக்கியை எடுத்துக்கொண்டனர். இராமன் முதலில் மெதுவாய் நடந்து சென்று, தந்தையார் பணம் இருந்த அறைக்குப் போனுன். கதவு திறந்து இருந்தது. இரா மன் மெதுவாய் உள்ளே எட்டிப் பார்த்தான் ; ஒருவன்

பணப்பெட்டியைத் திறந்து நகைகளையும் ரூபாய்களை யும் மூட்டையாகக் கட்டுவதைக் கண்டான்.

இராமன் வாயிற்படிமீது நின்றான்; தன் விளை யாட்டுத் துப்பாக்கியைத் திருடனுக்கு நேராகப் பிடித் தான். உடனே இராமனுக்குப் பின்னால் நின்ற இலட் சுமணன் சிங்கத்தைப்போலக் கர்ச்சனை செய்தான். திடுக்கிடக்கூடிய அக்கர்ச்சனையைக் கேட்ட திருடன் கதவின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தான்.

பாவம்! திருடன் பயந்து நடுங்கினான்; துப்பாக் கியை நீட்டிய மனிதன் சிங்கத்தையும் அழைத்து வந் திருப்பதாக எண்ணினான். அவன் உடல் நடுங்கினது. அதைக் கண்ட இராமன் மெதுவாகக் கதவை வெளிப் புறம் பூட்டிக்கொண்டு சென்றான்.

இலட்சுமணன் போட்ட சத்தத்தால் வீட்டில் இருந்த அனைவரும் விழித்துக்கொண்டனர். இராமன் தன் தந்தையோடு வெளியே ஓடிப் போலீஸ்டேஷனை அடைந்தான்; உடனே போலீசார் இராமன் வீட்டுக்கு வந்து, கள்வனைப் பிடித்துக்கொண்டனர். கள்வன் தண்டிக்கப்பட்டான்.

இராமனும் இலட்சுமணனும் திருடனை ஏமாற் றிய விதத்தை அறிந்த போலீஸ் உத்தியோகஸ்தர், அவர்களைப் புகழ்ந்து தங்கப் பதக்கங்களை அளித் தனர். பிள்ளைகளே, சிறுவர்களின் தைரியத்தைப் பார்த்தீர்களா!

கேள்விகள்

1. இராமனும் இலட்சுமணனும் எதை அறிந்தவர்? எதை அறியாதவர்?
2. மாமனார் தந்த பரிசுகள் எவை?
3. இருவரும் திருடனை எப்படி ஏமாற்றினர்?
4. திருடன் எவ்வாறு பிடிபட்டான்?
5. நீ இக்கதையால் அறிவது யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை **மௌனமாகப்** படி; பாராக்கட்குத் **தலைப்புக்** கொடு.
2. இதற்குக் குறிப்புகளைத் தயார் செய்; இதனை **நாடகமாக நடித்துக் காட்டு.**
3. இதைச் சுருக்கி 12 வாக்கியங்களில் எழுது.
4. இக்கதையைத் திருடன் கூறுவது போலக் கூறு.
5. இதனை இராமன் கூறுவது போலக் கூறு.
6. இந்நிகழ்ச்சியை நீ செய்தது போலக் கூறு.
7. 4-ஆம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
8. 5-ஆம் பாராவில் உள்ள வினைமுற்றுகள் சொல்.
9. 3-ஆம் பாராவில் உள்ள ஒருமை பன்மைகளைக் கூறு.
10. முதல் பாராவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?
11 அதில் உள்ள எழுவாய்களைக் குறிப்பிடு.

6. கிராமக் கைத்தொழில்கள்—I

தாமோதரன்	கோடை	விடுமுறை	காட்டுப்பாக்கம்
தேவையான	முதலியவற்றை	அளிப்போன்	விடை
மரவேலை	தையல் வேலை	பண்டமாற்று	சேமித்து.

தாமோதரன் நான்காம் வகுப்பு மாணவன். அவன்வாசித்துக்கொண்டிருந்த பள்ளிக்கூடம்கோடை விடுமுறைக்காக மூடப்பட்டது. தாமோதரன் தன் தாயாருடன் காட்டுப்பாக்கம் என்னும் கிராமத்துக்குப் போனான். அங்கு அவன் மாமனார் இருந்தார்.

அவன் ஒரு நாள் தன் மாமனாரைப் பார்த்து, 'மாமா, நீங்கள் உங்கட்குத் தேவையான ஆடை முதலியவற்றை எவ்விடத்திலிருந்து வாங்குகிறீர்கள் ? இச் சிறிய கிராமத்தில் ஒன்றும் கிடைக்காதன்றோ ?' என்று கேட்டான். மாமனார், 'தாமோதரா, நீ என்னுடன் வா. உன் கேள்விக்கு விடை அளிப்பேன்,' என்றார்.

உடனே இருவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டனர்; பக்கத்துத் தெருவை அடைந்தனர். அங்கு இருவர் நூல் சுற்றிக்கொண்டும், துணி நெய்துகொண்டும் இருந்தனர். மாமனார் தாமோதரனைப் பார்த்து, 'தாமோதரா, இவர்கள் துணி நெய்பவர்கள். இக் கிராம வாசிகள் இவர்களிடமே தங்கட்கு வேண்டும் துணிகளை வாங்கிக்கொள்ளுகிறார்கள்,' என்றார்.

பின்னர் இருவரும் அத்தெருக் கோடிக்குச் சென்றனர். அங்குத் தச்சன் ஒருவன் மரவேலை

செய்துகொண்டு இருந்தான். அப்போது மாமனுர் தாமோதரனைப் பார்த்து, 'இவர்தாம் இக்கிராமத் தச்சர். நம் வீட்டில் உள்ள மேஜை, நாற்காலிகள், பீரோ, கட்டில் முதலிய மரச்சாமான்கள் இவர் செய்தவைகளே. இக்கிராமத்தாரும் பக்கத்தில் உள்ள கிராம வாசிகளும் இவரிடமிருந்தே மரச் சாமான்களை வாங்குகிறுர்கள்,' என்றுர்.

---

7. கிராமக் கைத்தொழில்கள்—II

பின்னர்த் தாமோதரனும் அவன் மாமனுரும் அடுத்த தெருவை அடைந்தனர். அங்கு ஒரு வீட்டுத் திண்ணையில் ஒருவன் தையல் வேலை செய்து வந்தான். மாமனுர் அவனைத் தாமோதரனுக்குக் காட்டி, நாங்கள் 'இவரிடமே சட்டை முதலானவற்றைத் தைத்துக் கொள்கிறேம். சுற்றிலும் உள்ள கிராம வாசிகளும் இவரிடமே துணிகள் தைத்துக்கொள்கின்றுர்கள்,' என்றுர்.

மேலும் அவர், 'தாமோதரா, அதோ ஒருவர் பாத்திரங்களைச் செய்கிறுர், பார்: நாங்கள் அவரிடம் பாத்திரங்களை விலைக்கு வாங்கிக்கொள்கிறேம். இவர்களைத் தவிர, பொற்கொல்லன், எண்ணெய் ஆட்டுபவன், மண் பாத்திரம் செய்வோன், சலவைத் தொழிலாளி, மயிர் வினைஞன் முதலிய தொழிலாளரும் இக்கிராமத்தில் இருக்கின்றனர்,' என்றனர்.

தாமோதரன், 'மாமா, நீங்கள் இவர்களுக்கு நெல்லைக் கொடுத்துத்தானே சாமான்களைப் பெறுகிறீர்கள்?' என்று கேட்டான். மாமனுர், 'ஆம்; நாங்கள் நெல்லைக் கொடுப்போம். ஒவ்வொரு தொழிலாளரும் எங்கட்குத் தேவையான பொருள்களைத் தருவர். இம்முறைக்குப் பண்ட மாற்று என்பது பெயர். நாங்கள் எங்கள் வாழ்க்கைக்கு அதிகமாக உள்ள நெல்லை விற்று, வரி செலுத்துவோம்; மீதிப் பணத்தைச் சேமித்து வைப்போம். இக்கிராம வாழ்க்கை எங்கட்குச் சுகத்தையே தருகின்றது,' என்ருர்.

தாமோதரன், 'ஆம்; இத்தகைய கிராமத்தில் வாழ்க்கை சுகமாகத்தான் இருக்கும். ஆனுல், கைத்தொழில்கள் இல்லாத கிராமங்களில் மக்கள் கஷ்டப்பட வேண்டும். அவர்களும் உங்கள் கிராம வாசிகளைப் போலக் கைத்தொழில்களை வளர்ப்பார்களானுல், எல்லாக் கிராம வாசிகளும் சுகமாகவே இருப்பார்கள் அல்லவா?' என்ருன்.

கேள்விகள்

1. கிராமத் தொழிலாளர் யார்?
2. அவரவர் வேலை என்ன?
3. கிராமத் தொழில்களைப் பற்றி உன் கருத்தென்ன?
4. 'பண்டமாற்று'—யாது?

5. 'இத்தகைய கிராமத்தில் வாழ்க்கை சுகமாகத் தான் இருக்கும்'-எத்தகைய கிராமத்தில் ? ஏன் ?

பயிற்சி

1. கிராமத் தொழிலாளரைப் பற்றி 16 வரிகளில் சுருக்கி எழுது.
2. சட்டைக்குக் காரணமான தொழிலாளர் யார் யார் ?
3. உளிக்குக் காரணமான தொழிலாளர் யார் யார்?
4. 'தாமோதரன்' இப்பெயரை அழைக்கும் போது '**தாமோதரா**' என்று ஆகிறது.

   இராமன், கிருஷ்ணன், கோவிந்தன், பாலன், அம்மணி, கமலம், சுந்தரி—இப் பெயர்கள் அழைக்கும்போது அடையும் மாறுதல்களை எழுது.
5. '**கண்ணா**' என்று அழைக்கும் போது மாறி வந்த பெயரின் உண்மை வடிவம் (இயல்பான பெயர்) **கண்ணன்** என்பது.

   அண்ணா, முருகா, வேலா, பையா, பெண்ணே-இவற்றின் இயல்பான பெயர் என்ன ?
6. இதனை **சம்பாஷணையாக நடித்துக் காட்டு.**

8. வீட்டுச் சுத்தம்

பெறுவதற்கு	தேங்காத	தேங்கிய	சதுப்பு
நிலம்	ஜுரக்கிருமிகள்	காற்ருேட்டம்	அமைந்த
மாளிகை	தாளிட்டு	உறங்குதல்	உட்கொண்டு
கடனுகும்	கவனம்	மெழுகுதல்	ஒட்டடை

நாம் சுகம் பெறுவதற்கு நமது உடல் சுத்தமாய் இருத்தல் வேண்டும். நமது உடல் சுத்தமாய் இருப்பதற்கு நாம் வாழும் இடம் முதலியன சுத்தமாய் இருத்தல் வேண்டும். நாம் வசிக்கத்தக்க இடம் நீர் தேங்காத இடமாய் இருப்பது நலம். எப்பொழுதும் நீர் தேங்கியுள்ள சதுப்பு நிலங்களுக்குப் பக்கத்திலும் பயிர் நிலங்களுக்குப் பக்கத்திலும் வீடுகள் இருத்தல் ஆகாது. ஏனெனில், அவ்விடங்கள் பல வகை ஜுரக் கிருமிகளுக்கு இருப்பிடங்களாகும்.

நமது வீடு வெளிச்சமும் காற்ருேட்டமும் இருக்கத் தக்க ஜன்னல்களும் கதவுகளும் அமைந்த அறைகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும். குடிசைகளாயினும், அவற்றுள் பல ஜன்னல்கள் இருத்தல் அவசியம். சிறிய வீட்டிலோ, அல்லது குடிசையிலோ, பலர் வாழ்தல் ஆகாது. காற்றும் வெளிச்சமும் பெற்றுள்ள ஒரு சிறிய அறை அல்லது குடிசை, அவை இரண்டும் இல்லாத ஒரு மாளிகையைக் காட்டிலும் சிறந்ததுஅன்ருே?

ஜன்னல்கள் இல்லாத வீட்டில் வசிப்பவர் வீட்டுக் கதவைத் தாளிட்டு உறங்குதல் பெருந்தவறு. தாளிடுத

லால் அவ்வீட்டில் வசிப்போர் வெளி விடும் அசுத்தக் காற்றைத் தவிர வெளியிலிருந்து சுத்தமான காற்று உள் நுழைய இடமில்லை. அதனுல், நம் மக்கள் இரவெல்லாம் தாங்கள் வெளிவிடும் காற்றையே உட்கொண்டு, உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்ளுகின்றூர்கள்.

நாம் தூங்கும் அறையில் பலவகைச் சாமான்கள் இருத்தல் கூடாது. வீட்டுச் சாமான்களை ஒரு தனி அறையில் வைத்து இருத்தல் வேண்டும். படுக்கை அறையில் பொருள்கள் அதிகமாயின், அங்கு வர வேண்டிய சுத்தமான காற்றுக் குறைந்து போகும். ஆதலால், படுக்கை அறையை எப்பொழுதும் சுத்தமாய் வைத்துக்கொள்ளுதல் நமது கடனுகும்.

சமையல் அறையைப் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அவ்வறையில் காற்று வருவதற்கு உரிய ஜன்னல்கள் இருக்கவேண்டும். புகை வெளிப்போவதற்குக் கூரையில் புகைக்கூடும் இருக்கவேண்டும். அங்குச் சமையலுக்கு உரிய பாத்திரங்களைத் தவிரப் பிற பொருள்கள் இருத்தல் கூடாது. ஒரு வீட்டில் படுக்கை அறையும் சமையல் அறையும் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும் அறைகளாம்.

வீடுகளுக்கு வருஷத்தில் இரு முறையாவது வெள்ளை அடிக்கவேண்டும். மண் தரை ஆயின், சுத்தமான களிமண்ணை நீரில் கரைத்து வாரத்துக்கு ஒரு முறையாவது மெழுகுதல் நலம். தினந்தோறும்

வீட்டின் பல பாகங்களையும் மூன்று முறையாவது பெருக்குதல் வேண்டும்; வீட்டின் கூரையில் படியும் ஒட்டடைகளை அவ்வப்போது நீக்கவேண்டும். இது வரையில் கூறிவந்தவற்றை நாம் கவனித்து நடப்போமாயின், சுகமாக வாழலாம்.

கேள்விகள்

1. எங்கு வீடுகள் இருத்தல் கூடாது ? ஏன் ?
2. வீடுகள் எப்படி இருத்தல் வேண்டும் ?
3. மாளிகையைக் காட்டிலும் சிறந்தது எது ?
4. சாமான்கள் தூங்கும் அறையில் இருக்கக் கூடாது—ஏன் ?
5. சமையல் அறை எப்படி இருக்க வேண்டும் ?
6. தரை, சுவர் எப்படி இருக்க வேண்டும் ?

பயிற்சி

1. உன் வீட்டைப்பற்றி 10 வாக்கியங்கள் எழுது.
2. சுத்தமான வீடு எப்படி இருக்கும் என்பதைப் பற்றி 12 வாக்கியங்கள் எழுது.
3. காற்று, நீர், சமையல் அறை, உடை, பள்ளியறை—இவற்றைப்பற்றித் தனித்தனிப் பாரா எழுது.
4. வந்தான், போகிறான், வருவாள்.-கேள்விகளாக மாற்று.
5. மாமா, தங்காய், அப்பா, அம்மா—இயல்பான பெயர்களாக மாற்று.
6. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
7. 2-ஆம் பாராவில் உள்ள பயனிலைகளைக் கூறு.
3. 3-ஆம் பாராவில் உள்ள எழுவாய்களைக் கூறு.

9. 'தலைதனைக் கொண்டு போம்.'

குமணன்	கூடியவன்	இளங்குமணன்	கொடியவன்
பிடிக்கவில்லை	பொருட்படுத்தாமல்	கொன்றுவிட	தீர்மானித்தான்
ஏழ்மை	புலவர்	விரட்டலாமா	அண்ணனாக
தவம்	அரசனுக்கு	அல்லாவிடில்	புத்திசொல்
நல்லறிவை	பணிவுடன்		

குமணன் என்னும் அரசன் தமிழ் நாட்டில் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். அவன் ஏழைகளுக்குத் தருமம் செய்பவன்; எதைக் கேட்டாலும் கொடுக்கக் கூடியவன்.

அவன் தம்பி இளங்குமணன் என்பவன். அவன் கொடியவன்; நல்ல அறிவு இல்லாதவன். தன் அண்ணன் எல்லோருக்கும் பொருளைக் கொடுப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் குமணனுக்குப் புத்தி சொன்னான். குமணன் அவன் வார்த்தையைப் பொருட்படுத்தாமல் தான தருமம் செய்து வந்தான்.

இளங்குமணன் கோபங் கொண்டான்; தன் வார்த்தையைக் கேட்காத குமணனைக் கொன்றுவிடத் தீர்மானித்தான். அதனை உணர்ந்த குமணன் காட்டிற்கு ஓடிவிட்டான். இளங்குமணன் அரசன் ஆனான்; "என் அண்ணன் தலையைக் கொண்டு வருபவருக்கு மிகுந்த பொருள் தருவேன்," என்றான்.

ஒரு தமிழ்ப் புலவர் குமணனைத் தேடிப் போனார்; குமணன் காட்டிற்குப் போனதை அறிந்தார். அவர் காட்டிற்குப் போனார்; குமணனைக் கண்டார்; தம் ஏழ்

மையை அவனுக்குத் தெரிவித்தார்; தமக்கு ஏதேனும் உதவி செய்யவேண்டும் என்று வேண்டினர்.

குமணன் புலவரைப் பார்த்தான்; “ஐயா, புலவரே, என் தலையைக் கொண்டு போம்; தம்பி, பொருள் தருவான்,” என்றான். அவன் தன் தலையை வெட்ட வாளையும் தந்தான்.

புலவர் யோசித்தார்; குமணன் தந்த வாளோடு இளங்குமணனிடம் ஓடினர். “பாவி! தரும குணம் உடைய உன் அண்ணனை விரட்டலாமா? அவனை அண்ணனாகப் பெற நீ தவம் செய்திருக்க வேண்டும். அவனை உடனே அழைத்து வந்து அரசனாக்கு. அல்லாவிடில், நீ கெடுவாய்,” என்று புத்தி சொன்னர்.

இளங்குமணன் அப்போதுதான் நல்லறிவைப் பெற்றான்; புலவரோடு காட்டுக்கு ஓடினான்; குமணனைப் பணிந்தான்; தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினான். குமணன் நல்லவன் அல்லவா? அவன், தம்பியை மார்போடு அணைத்தான்; நகரை அடைந்தான்; புலவருக்கு வேண்டிய பொருள் கொடுத்தான்; முன்போல அரசனாய் இருந்துவந்தான். இளங்குமணனும் நல்லறிவோடும் அண்ணனிடம் பணிவுடனும் நடந்துவந்தான்.

கேள்விகள்

1. குமணன் அருங்குணம் யாது ?
2. அவன் ஏன் காட்டிற்கு ஓடினான் ?
3. அவன் எப்படி மீண்டு வந்தான் ?
4. நீ இப்பாடத்தால் அறிவது யாது ?

பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படி; பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.
2. நீ குமணனாக இருந்து இக்கதையைச் சொல். 1
3. குமணன் குணம் - இளங்குமணன் சீற்றம் - காடு - புலவர் - முடிவு: இக் குறிப்புகளைக் கொண்டு இக்கதையை 12 வாக்கியங்களில் சுருக்கி எழுது.
4. முதல் இரண்டு பாராக்களில் உள்ள எ. ப. செ. கூறு.
5. மூன்றும் பாராவில் உள்ள பயனிலைகளைக்கூறு.
6. ஐந்தாம் பாராவில் உள்ள எழுவாய்களைக் கூறு.
7. ஆறும் பாராவில் உள்ள ஒருமை-பன்மை கூறு.
8. குமணன் - ஆண்பால் பெயர், வள்ளி - பெண்பால் பெயர்.

   அரசர்கள் - பலர்பால் பெயர், அணில்-ஒன்றன்பால் பெயர் அணில்கள் - பலவின்பால் பெயர்.

   இந்த அறிவைக்கொண்டு, இப்பாடத்தில் உள்ள பெயர்ச்சொற்களைப் பாகுபடுத்தி எழுது.

எண்	ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்
1					
2					
3					

9. இதனை நாடகமாக நடித்துக் காட்டு.

10. ஆறு

1. கல்லும் மலையும் குதித்துவந் தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி எங்கும்— நான்
இரங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

2. கட்டும் அணையேறிச் சாடிவந் தேன்— அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந் தேன்—மடைச்
சிப்புகள் மோதித் திறந்து வந்தேன்.

3. ஏருத மேடுகள் ஏறிவந் தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊருத ஊற்றிலும் உட்புகுந் தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

4. மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்— நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்;
நிற்க எனக்கினி நேரமில்லை—யின்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா !

—தேசிக விநாயகம் பிள்ளை.

பயிற்சி

1. ஆற்றைப்பற்றி 10 வரிகளில் எழுது.
2. ஆறுகளால் நமக்கு என்ன பயன்? விடை எழுது.
3. இப்பாட்டுகளில் வரும் ஆற்றின் பிரயாணத்தைச் சுருக்கி எழுது
4. குதித்து, ஏருத, வாசமலர் நீண்டவழி— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.



11. நீதி மன்றங்கள்

நீதி மன்றம்	நியாயம்	வழக்கு
விசாரணை	முனிசீப்புக் கோர்ட்டில்	ஜில்லாக் கோர்ட்
உயர்நீதி மன்றம்	தலைநகர்	சிக்கலான
தீர்ப்பு	சிவில்	கிரிமினல்
வாதி	பிரதிவாதி	நியாய வாதி
நீதிபதி	நுணுக்கமாக	அளிக்கின்றூர்

நீதி மன்றங்கள் என்பன நியாயமளிக்கும் சபைகள் ஆகும். ஒரு கிராமத்தில் உண்டாகும் சிறிய வழக்குகளைக் கிராம அதிகாரியே விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கின்றூர். ஆனல், பெரிய வழக்குகள் ஜில்லா முனிசீப்புக் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு அளிக்கப்படுகின்றன. இக் கோர்ட்டில் நீதியளிப்பவர் ஜில்லா முனிசீப்பு என்பவர். ஜில்லா முனிசீப்புக் கோர்ட்டுக்கு மேலாக ஜில்லாக் கோர்ட்டு இருக்

கின்றது. அங்கு ஜில்லா நீதிபதி (ஜட்ஜ்) என்பவரும், அவருக்கு உதவியாகச் சப் ஜட்ஜுகள் எனப்படும் உதவி நீதிபதிகளும் இருக்கின்றார்கள்.

மேலே கூறப்பெற்ற நீதி மன்றங்களுக்கு மேலாக ஒவ்வொரு மாகாணத்திலும் உயர்நீதி மன்றம் (ஹைகோர்ட்டு) ஒன்று இருக்கின்றது. நமது சென்னை மாகாணத்தின் தலைநகர் சென்னை அன்றோ? சென்னை நகரில் ஹைகோர்ட்டு இருக்கிறது. அதில் பதினான்கு நீதிபதிகள் மாகாணம் முழுவதிலுமிருந்து வரும் பெரிய சிக்கலான வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்புக் கூறுகின்றார்கள்.

நீதி மன்றங்களுக்குக் கொண்டு வரப்படும் வழக்குகள் பெரும்பாலும் இரண்டு வகைப்படும். அவை சிவில் வழக்குகள், கிரிமினல் வழக்குகள் என்பன. பண சம்பந்தமான வழக்குகள் சிவில் வழக்குகள் ஆகும். கொள்ளை, திருட்டு, கலகம், நெருப்பு வைத்தல் முதலியன கிரிமினல் வழக்குகள் எனப்படும்.

நியாயம் வேண்டுமென்று வழக்குத் தொடர்பவன் வாதி எனப்படுவான். அவன் எதிரி, பிரதிவாதி எனப்படுவான். இவ்விருவரும் சட்டங்களில் வல்லவர்களாகவும் பேசுவதில் சமர்த்தர்களாகவும் இருந்தால், இவர்களே நீதி மன்றங்களில் பேசலாம். இன்றேல், இவர்கள் தங்களுக்குப் பதிலாகப் பேச நியாய வாதிகளை நியமிக்க வேண்டும். நியாய வாதிகள் சட்டப் பரீட்சை

களில் தேறிப் பட்டம் பெற்றவர்கள். அவர்கள் வழக்கு களை நுணுக்கமாக ஆராய்ந்து, நீதிபதியிடம் தெளி வாகப் பேசுவார்கள். அவர்கள் கேட்கும் பணத்தை வாதி, பிரதிவாதிகள் கொடுக்க வேண்டும்.

நியாயாதிபதிகள் சட்டப்படி நடப்பவர்கள். அவர்கள் சட்டங்களை மீறி ஒன்றுஞ் செய்ய மாட் டார்கள். அரசாங்கத்தார், பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்ட சபையில் ஆலோ சித்துச் சட்டங்களைச் செய்கின்றனர். ஆதலால், அவற்றை எவரும் மாற்ற முடியாது.

கேள்விகள்

1. ஜில்லாவில் உள்ள நீதி மன்றங்கள் எவை? அவற்றுக்கு உரிய அதிகாரிகள் யாவர்?
2. உயர்நீதி மன்றம் யாது? அதனைப்பற்றி விளக்கு.
3. சிவில், கிரிமினல் வழக்குகள் எவை?
4. வாதி, பிரதிவாதி, நியாய வாதி, நீதிபதி யாவர்?
5. சட்டங்களைச் செய்பவர் யார்?

பயிற்சி

1. தீர்ப்பு, நுணுக்கமாக, நீதிமன்றம், வழக்கு-இவற் றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.
2. நீதி மன்றங்களைப்பற்றிச் சுருக்கி 3 பாராக்கள் எழுது.

3. இராமன் வந்தான், கண்ணன் போனுன், கமலம் பாடினுள், எலி ஓடினது, நாய்கள் குரைத்தன, அவர்கள் பார்த்தார்கள்.-இவற்றுள், தடித்த சொற்கள் வினைமுற்றுகள் அல்லவா? இவை யாவும் நடந்துவிட்ட செயல்களைக் குறிப்பவை. ஆதலால் இவற்றின் காலம் இறந்த (நடந்துபோன) காலம் எனப்படும்.

ஒன்பதாம் பாடத்தில் உள்ள இறந்தகால வினைமுற்றுகளை எழுது.

---

12. சாரணச் சிறுவர்கள்

மரியாதை	பிளேகு	நோய்	தலைகாட்டியது
பரவ	நாள்தோறும்	இன்றேல்	காசின்றி
பதின்மர்	நீடித்து	மாண்டனர்	பழகுவது
பரோபகாரம்	பேரின்பம்	கடமை	மரியாதை

பிறர்க்கு உதவி செய்வதே சாரணச் சிறுவரது முதற் கடமை. அவர்கள் கடவுளிடத்தும் அரசரிடத்தும் குடிகளிடத்தும் அன்பும் மரியாதையும் உடையவர்கள்; ஆபத்தில் எவர்க்கும் உதவிசெய்ய முன் வருபவர்கள்.

ஒரு முறை ஒரு நகரத்தில் திடீரெனப் பிளேகு என்னும் கொடிய நோய் தலை காட்டியது. அது நகர் எங்கும் பரவ ஆரம்பித்தது. நாள்தோறும் இருபது முப்பது பேர் அந்நோயால் இறந்தனர். இறந்தவர்

உடல்களை உடனுக்கு உடனே எரித்துவிட வேண்டும். இன்றேல், அந்த நோய் மேலும் அதிகமாகப் பல இடங்களில் பரவும்.

ஏழை மக்களில் பலர் இறந்த தம் உறவினரை எரிக்கக் காசின்றித் தவித்தனர். நோயாளிகள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். நோயாளிகளை எடுத்துச் செல்லும் மனிதர்களுக்கும் அந்நோய் ஒட்டிக்கொள்ளும். அதனால், ஏழை நோயாளிகளை எடுத்துச் செல்ல மனிதர்கள் வரவில்லை. ஆனால்,

பணக்காரரை எடுத்துச் செல்லப் பலர் முன் வந்தனர். ஏன்? பணம்! பணம்!! பணம்!!!

இதனை அறிந்த அந்நகரச் சாரணச் சிறுவர் பதின்மர் ஏழை நோயாளிகளைக் காக்க முன் வந்தனர். அவர்கள் பிளேகு நோயால் வருந்தியவர்களைத் தூக்கிக்கொண்டு வைத்திய சாலைக்குச் சென்றார்கள்; வைத்திய சாலையில் இடம் இல்லாமற்போகவே நோயாளிகளுக்கு வேண்டிய மருந்துகளை அவர்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள்; அவர்களை உபசரித்து மருந்துகளைக் கொடுத்தார்கள்.

பிளேகு நோய் இரண்டு மாதம் நீடித்து இருந்தது. அந்நோயால் பலர் மாண்டனர்; சிலர் தப்பிப் பிழைத்தனர். ஆனால், பாவம்! நோயாளிகட்கு உதவி செய்துவந்த சாரணச் சிறுவருள் அறுவர் நோய்ப்பட்டு இறந்தனர். நோயாளிகளிடம் பழகுவதால் தங்கட்கு அந்நோய் வரும் என்பதை முன்னரே அறிந்து இருந்தும், அச்சிறுவர்கள், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு உதவி செய்து, வீரத்தோடு நோய்ப்பட்டு இறந்தார்கள் எனின், அவர்களது பரோபகார குணத்தை என்னெனப் புகழ்வது!

பிறர்க்குத் தொண்டு செய்வதே பேரின்பம்!

கேள்விகள்

1. சாரணச் சிறுவர் இயல்பு என்ன?
2. பிளேகு என்பது யாது?

3. சாரணச் சிறுவர் யாருக்கு ஏன் உதவி செய்தனர் ?

4. நீ இப்பாடத்தால் அறிவது யாது ?

பயிற்சி

1. இந்நிகழ்ச்சியை 12 வாக்கியங்களில் எழுது.

2. காசின்றி, பேரின்பம், உடனுக்குடன்—இவற்றைப் பிரி.

3. பர + உபகாரம் = பரோபகாரம்.

4. இப்பாடத்தில் உள்ள இறந்தகாலச் சொற்களைக் கூறு.

5. கடைசிப் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

6. இரண்டாம் பாராவில் உள்ள ஒருமை, பன்மை கூறு.

7. மூன்றும் பாராவில் உள்ள வினைமுற்றுகளைக் கூறு.

8. நான்காம் பாராவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை ?

9. வருவான், பார்ப்பான், அடிப்பார், பேசும்—இவை தொழில் இனி நடப்பதைக் குறிக்கும் வினைச் சொற்கள். அஃதாவது, இவை **எதிர்காலம்** காட்டுவன.

அவள் ஆடுவாள், இவன் பாடுவான், அவர் நிற்பார், எலி ஓடும், நாய்கள் குரைக்கும். இவற்றில் உள்ள **எதிர்காலச்** சொற்கள் எவை ?



13. பயிர்த்தொழில்

விதைத்து	வளர்த்து	அறுவடை	பெரும்பாலர்
கேழ்வரகு	தானிய வகை	ஏற்றம்	ஆற்றுப் பாய்ச்சல்
குத்தகை	அணைக்கட்டு	அரசாங்கத்தார்	பெரியாறு
கோதாவரி	கிருஷ்ணு	பெருந்தொகை	இலாக்கா
விவசாயம்	ஐக்கிய நாணயச் சங்கம்.		

பயிர்த்தொழில் என்பது நிலத்தை உழுது, விதைகளை விதைத்து, பயிரை வளர்த்து, அறுவடை செய்யும் தொழில் ஆகும். நமது இந்திய நாட்டில் பயிர்த்தொழிலே சிறந்த தொழில். நமது நாட்டில் பயிரிடக் கூடிய நிலங்களே அதிகம். பயிரிட்டுப் பிழைக்கும் மக்களே இங்கு மிகுதியானவர்கள். கிராமங்களில் உள்ள மக்களில் பெரும்பாலார் பயிர்த்தொழில் செய்பவரே.

நிலத்தில் இருவகை உண்டு. நெல் பயிராகும் நிலம் ஒரு வகை; அதற்கு 'நன்செய் நிலம்' என்பது பெயர். சோளம், கேழ்வரகு முதலிய தானிய வகைகள் பயிராகும் நிலம் மற்றொரு வகை; அதற்குப் 'புன்செய் நிலம்' என்பது பெயர்.

நமது சென்னை மாகாணத்தில் ஆற்றோரமாக உள்ள நிலங்கள், ஆற்றுப் பாய்ச்சலைப் பெற்றுள்ள நிலங்கள் ஆகிய இவற்றில் நெல் மிகுதியாகப் பயிர் ஆகும். ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத இடங்களில் ஏரிப் பாய்ச்சல் நடைபெறுகிறது ; ஏரிப் பாய்ச்சலும் இல்லாத இடங்களும் சில உண்டு. அங்குள்ள வயல் களில் மழை பெய்தால்தான் பயிர் விளையும்; கிணறு களை ஆழமாக வெட்டிக் கபிலை ஏற்றங்கொண்டு நீரை இரைத்துப் பயிர் செய்வதும் உண்டு.

கிராமத்தில் உள்ளவர்களில் சிலர் தம் வயல்களைத் தாமே வேலையாட்களை வைத்துப் பயிர் செய்வதும் உண்டு. சிலர் பிறருடைய வயல்களைக் குத்தகைக்குப் பெற்று, பயிரிட்டு, அதிற் கிடைப்பதில் ஒரு பகுதியை நிலத்தார்க்குக் கொடுத்துவிட்டு, மிகுந்ததைத் தாம் எடுத்துக் கொள்வர்.

பயிர் செய்யும் நிலங்களுக்கு ஆற்று நீரைப் பாய்ச்ச அரசாங்கத்தார் சில வசதிகள் செய்துள்ளனர்; ஆற்று நீர் வீணுகக் கடலில் சேராதபடி அவ்வவ் விடங்களில் அணைக்கட்டுகள் கட்டி, ஆற்று நீரைத் தேக்கிக் கால்வாய்கள் மூலமாக ஆற்றுப் பாய்ச்சல்

மேட்டூர் அணை

இல்லாத நிலங்களுக்கு அனுப்புகின்றனர். இத்தகைய அணைக்கட்டுகளில் சிறந்தவை காவிரியாற்றில் கட்டப் பட்டுள்ள அணைக்கட்டு, பெரியாற்று அணைக்கட்டு, கோதாவரி அணைக்கட்டு, கிருஷ்ண அணைக்கட்டு, மேட் டூர் அணைக்கட்டு முதலியன. இவற்றுள் மிகப்பெரியது மேட்டூர் அணைக்கட்டாகும்.

இந்த மேட்டூர் அணைக்கட்டால் தஞ்சாவூர், சேலம், கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில், முன் நீரையே கண்டிராமல் பாழாய்க் கிடந்த பல இடங் களும் நீரைப் பெற்று விளை நிலங்களாக மாறியுள் ளன. அங்குப் பயிர்த்தொழில் நன்முக நடைபெற்று வருகிறது. இந்த அணையைக் கட்ட மிகப் பெருந் தொகை செலவாயிற்று.

அரசாங்கத்தார், ஏரிகளிலிருந்து சிறிய கால் வாய்கள் மூலமாக ஏரிப் பாய்ச்சலையுடைய நிலங்கட்கு நீரை அனுப்புகின்றனர். அரசாங்கத்தார் இவ்வாறு நிலங்கட்கு வேண்டிய நீரைப் பெறத்தக்க வசதிகளைச் செய்து வருவது பாராட்டத் தக்கது. இதற்கு உண்டா கும் செலவை அரசாங்கத்தார் நிலங்கட்குத் தீர்வை விதித்து, நிலத்துக்கு உரியவரிடமிருந்து பணத்தை ஆண்டு தோறும் வசூல் செய்கின்றனர்.

நமது மாகாணத்தில் பயிர்த்தொழிலே மிகவும் சிறந்த தொழிலாய் இருப்பதால், அரசாங்கத்தார் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய வசதிகள் செய்து வரு

கின்றனர்; பயிர்த்தொழிலைக் கவனிக்கத் தனி இலாககா ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றனர்; அதற்கு 'விவசாய இலாக்கா' என்பது பெயர். அதன் அதிகாரி விவசாய இலாக்கா டைரக்டர் என்பவர்.

பயிர்த்தொழில் செய்யும் மக்களுக்கு வேண்டிய பணத்தையும் அரசாங்கத்தார் குறைந்த வட்டிக்குக் கடனாகத் தருகின்றனர். இவ்வாறு கடன் தந்து, மாதந் தோறும் சிறிது சிறிதாகப் பணத்தை வசூலிக்கின்றனர். இவ்வேலைக்கும் தனி இலாக்கா ஒன்றை அரசாங்கத்தார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். அதற்கு ஐக்கிய நாணயச் சங்கம் என்பது பெயர்.

இவ்வளவு வசதிகளையும் பயன்படுத்திக் கொண்டு கிராம வாசிகள் பயிர்த்தொழிலை நன்கு கவனிப்பார்களாயின், நமது நாடு செல்வம் பொருந்திய நாடாகும் அல்லவா ?

கேள்விகள்

1. பயிர்த் தொழில் என்பது யாது?
2. குத்தகை—யாது ?
3. ஐக்கிய நாணயச் சங்கம் என்பது என்ன ?
4. அணைக்கட்டு என்பது என்ன ?
5. உனக்குத் தெரிந்த அணைக்கட்டுகள் எவை ?
6. நன்செய்—புன்செய் நிலங்கள் எவை ?
7. விவசாய இலாக்கா—யாது ?

பயிற்சி

1. அணைக்கட்டு, குத்தகை, விவசாய இலாக்கா - இவற்றைப் பற்றித் தனித்தனிப் பாரா எழுது.
2. நீ நிலங்களைப் பற்றி அறிந்ததை 6 வரிகளில் எழுது.
3. பயிர்த்தொழில் முக்கியமானது என்பதை விளக்கி 12 வாக்கியங்கள் எழுது.
4. முதல் பாராவில் உள்ள ஒருமை, பன்மை கூறு.
5. 2-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
6. 3-ஆம் பாராவில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.
7. 4-ஆம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
8. 5-ஆம் பாராவில் உள்ள பொருள், இடப் பெயர்களைக் கூறு.

---

14. வரவுக்குமேல் செலவு

தந்தையார்	பிச்சைக்காரன்	நெருங்கினர்	அரிசிக்கடை
சிங்கப்பூர்	சிறப்பாக	சுரண்டி	சுற்றத்தார்.

கோபாலன் தன் தந்தையாரோடு ஒரு நாள் மாலை உலாவப் போனான். அவன் வழியில் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்து இருந்ததைக் கண்டான். அவன் தன் தகப்பனாரைப் பார்த்து, 'அப்பா, இவன் ஏன் பிச்சை எடுக்கிறான்? நாம் சுகமாய் இருக்கின்றோமே!' என்று கேட்டான்.

தகப்பனுர் ஒன்றும் பேசவில்லை. இருவரும் பிச்சைக்காரனிடம் நெருங்கினர். அப்போது தகப்பனுர், 'கோபாலா, நாம் இவனைக் கேட்போம். இவன் என்ன சொல்லுகிருனே பார்ப்போம்' என்ருர். அவர் பிச்சைக்காரன் எதிரில் நின்று, 'பழனி, நீ அரிசிக்கடை வைத்திருந்தாய் அல்லவா? நீ ஏன் இப்படி வந்து விட்டாய்?' என்று கேட்டார்.

பழனி, 'ஐயா, நீங்கள் சிங்கப்பூருக்குப் போனபோது நான் அரிசிக்கடை வைத்திருந்தேன் அல்லவா? அப்போது எனக்கு நல்ல இலாபம் வந்தது. நான் என் மகளுக்குத் திருமணத்தைச் சிறப்பாக நடத்தினேன்; அதற்குப் பதினுயிரம் ரூபாய் செலவழித்தேன். அப்பெண் ஒரு வருடம் வாழ்ந்து இறந்துவிட்டாள். பின்னர் என் மனைவியும் இறந்துவிட்டாள். அரிசிக்கடையில் இருந்த வேலையாட்கள் என்னை மோசம் செய்துவிட்டார்கள். நான் பணக்காரனுய் இருந்தபொழுது என் பணத்தைச் சுரண்டிக்கொண்டிருந்த சுற்றத்தார் என்னைக் கைவிட்டனர். கல்வி இருந்தாலும் எங்கேயாவது பிழைக்கலாம். நானே கல்வி அறிவு இல்லாத மூடன். மேலும், நான் வரவுக்குமேல் செலவு செய்தேன். இவற்ருல் என் கதி இப்படி ஆயிற்று,' என்று கூறி, 'ஓ' என்று அழுதான்.

கோபாலன் தகப்பனுர் அவனைத் தேற்றி, ஒரு ரூபாய் கொடுத்துவிட்டுச் சென்ருர். போகும் வழியில் அவர் கோபாலனைப் பார்த்து, 'தம்பி, இவன் கதை

யைக் கேட்டாய் அல்லவா? நீ அதில் இருந்து தெரிந்துகொண்டது என்ன?' என்று வினவினர்.

கோபாலன், 'அப்பா, கலியாணத்துக்கு ஆடம்பரச் செலவு கூடாது; சுருக்கமாகச் செய்யவேண்டும்; வேலை ஆட்களிடம் கடையையோ பிறவற்றையோ முற்றிலும் நம்பிவிட்டு மோசம் போகக்கூடாது; சுற்றத்தவர்க்கு அளவுக்குமேல் எந்த உதவியும் செய்யலாகாது; நன்ருகக் கல்வி கற்கவேண்டும்; வரவுக்கு மேல் செலவு செய்யக்கூடாது,' என்னும் இவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டேன்,' என்ருன்.

தகப்பனுர் கோபாலனைப் பார்த்து, 'மகனே, நீ இந்த விஷயங்களை நினைவில் வைத்து ஒழுங்காக நடப்பாயாயின், உனது வாழ்க்கை சுகவாழ்க்கையாகும்' என்ருர்.

கேள்விகள்

1. பணக்காரன் பிச்சைக்காரன் ஆனது எப்படி?
2. கோபாலன் அறிந்த நீதி என்ன?
3. நீ உணரும் படிப்பினை யாது?

பயிற்சி

1. இந்நிகழ்ச்சியை 15 வரிகளில் எழுது.
2. நீ கோபாலனுக இருந்து இந்நிகழ்ச்சியைக் குறி.
3. நீ பழனியாக இருந்து உன் வரலாற்றைக் கூறு.
4. இப்பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டு.
5. 'வரவுக்கு மேல் செலவு செய்யக்கூடாது'—என்பதை விளக்க இந்நிகழ்ச்சியை எழுது.

6. மூன்றும் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
7. அதில் உள்ள பெயர்—வினைகளைக் குறி.
8. அதில் உள்ள காலங்களைக் குறிக்கும் சொற்களை எழுது.
9. அதில் உள்ள ஒருமை—பன்மைகளைக் குறி.
10. முதல் இரண்டு பாராக்களில் உள்ள காலம் காட்டும் சொற்களை எழுது.
11. ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்புக் கொடு.

---

15. தேயிலை

பானம்	**பறிப்பது**	**சேர்வராயன்மலை**
தேயிலை	**உலரவை**	**கஷாயம்**
சீனம்	**விற்பனை**	**மணத்தோடு**
உலகெலாம்	**பொன்னிறம்**	**விஷம்**
பரவிவிட்டது	**தயாரிப்பது**	**பருகல்**
மலைச்சாரல்	**நீலகிரி**	**சுறுசுறுப்பு**

காப்பிப் பானம் காப்பிக் கொட்டைத் தூளைக் கொண்டு செய்யப்படுவது அல்லவா? அதுபோலத் தேயிலைப் பானம் 'தேயிலை' என்னும் இலையைக் கொண்டு செய்யப்படுவது. காப்பிப்பானத்தைப் போல வேதேயிலைப் பானமும் பலரால் கொள்ளப்படுகிறது. தேயிலைத் தோட்டங்கள் நமது நாட்டிலும் இருக்கின் றன. ஆதலின், நீங்கள் தேயிலையைப் பற்றி தெரிந்து கொள்வது நலம் அல்லவா?

தேயிலைச் செடி முதலில் சீனத்தில் மாத்திரந் தான் இருந்தது. பின்னர் இது உலகெலாம் பரவி

விட்டது. இது இப்போது எங்கும் பயிர் செய்யப்படுகிறது. இது மலைச்சாரலிலேதான் பயிராகும். இது, சுமார் பத்து அல்லது பன்னிரண்டு அடி உயரம் வளரக்கூடியது. அப்படி உயரமாய் வளர்ந்தால், இதன் இலைகளைப் பறிப்பது கஷ்டமாகும். ஆதலால்,

தோட்டக்காரர் இதனை ஐந்து அடிக்கு அதிகமாக வளரவிடுவது இல்லை.

தேயிலைச் செடியின் மெல்லிய இலையே பானத்திற்குப் பயன்படுவது. தோட்டக்காரர் வருஷத்துக்கு மூன்று முறை கொழுந்து இலைகளைச் சேகரிப்பர்; பின் அவற்றை ஒரு நாள் முழுவதும் நிழலில் உலர வைப்பர்; நாள் முழுவதும் உலர்ந்த பிறகு, அவற்றை இருப்புச் சட்டிகளில் போட்டு வறுப்பர். வறுத்த பிறகு இலை

கள் கறுப்பு நிறத்தையாவது பொன்னிறத்தையாவது அடைந்து தூளாகிவிடும். அத்தூளையே டப்பிகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

படத்தில் காட்டப்பட்டு இருப்பது ஒரு தேயிலைத் தோட்டம். அதில் ஒரு பெண் பிள்ளை தேயிலையைப் பறிப்பதை நீங்கள் காணலாம். தேயிலைத் தோட்டங்களில் நூற்றுக் கணக்கான மக்கள் வேலை செய்வார்கள். சென்னை மாகாணத்தில் நீலகிரி, சேர்வராயன் மலை முதலிய இடங்களில் தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன.

தேயிலைக் கஷாயம் எவ்வாறு தயாரிப்பதென்பது பலருக்குத் தெரிவதில்லை. ஒரு பாத்திரத்தில் தேயிலையைப் போட்டு அதன்மீது கொதிக்கும நீரை நமக்கு வேண்டும் அளவு ஊற்றிப் பாத்திரத்தை மூடிவிட வேண்டும். சிறிது நேரம் கழிந்ததும் கஷாயத்தை வடிகட்டி இறக்கவேண்டும். அதனுடன் நன்றாகக் காய்ச்சிய பாலைச் சேர்த்துச் சர்க்கரையும் போட்டு, நன்றாகக் கலக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் தேயிலைப் பானமே மிகுந்த மணத்தோடு இருக்கும்.

எதுவும் அளவுக்கு மிஞ்சினால் விஷமாகும். ஆதலால், இப்பானத்தை அளவுக்குமேல் பருகலாகாது. அளவோடு பருகின், சுறுசுறுப்பு உண்டாகும். அளவுக்கு மேலே பருகின், தூக்கம் வராது; பலவித நோய்கள் உண்டாகலாம். பெரும்பாலும் தேயிலைப் பானம் மாலை வேளையில் பருகுதல் நல்லது.

கேள்விகள்

1. தேயிலை நமது மாகாணத்தில் எங்குப் பயிரா கிறது?
2. தேயிலை தயாரிப்பது எப்படி?
3. அதன் நன்மை என்ன? தீமை என்ன?
4. தேயிலைக் கஷாயம் தயாரிப்பது எப்படி?
5. அதன் முதல் இடம் எது?

பயிற்சி

1. தேயிலை - பயிராதல் - விற்பனை - கஷாயம் இறக்கல் - நன்மை தீமைகள்.—இக் குறிப்புகளைக் கொண்டு இப்பாடத்தை 16 வரிகளுள் சுருக்கி எழுது.
2. சுறுசுறுப்பு, கடுகடுப்பு, வழவழப்பு, பளபளப்பு. இப்படி இரட்டைப்பட வரும் சொற்கள் இரட்டைச்சொல் எனப்படும். இவற்றுள் ஒன்றைப் பிரித்தால் பொருள் தராது; இரண்டும் சேர்ந்து இருந்தாற்றான் பொருள் தரும்.

   இம்மாதிரியுள்ள வேறு சொற்களைச் சொல்.
3. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
4. இரண்டாம் பாராவில் உள்ள ஒருமை—பன்மை கூறு.
5. மூன்றும் பாராவில் உள்ள பொருள்—இடப் பெயர்களைக் கூறு.
6. நான்காம் பாராவில் உள்ள வினைச்சொற்களின் காலத்தைக் கூறு.
7. ஐந்தாம் பாராவில் உள்ள வாக்கியங்களை எண்ணிச் சொல்.
8. ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்புக் கொடு.

16. ஆபத்தில் உதவி

படம் பார்த்து விஷயம் சொல்:



கேள்விகள்

1. சாரணன் என்பவன் யார் ?
2. அவன் செய்த உதவி யாது ?
3. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது ?

பயிற்சி

1. ஒவ்வொரு படத்திற்கும் ஒரு வாக்கியம் சொல்.
2. இந்நிகழ்ச்சியை 8 வாக்கியங்களில் எழுது.
3. நீ சாரணச் சிறுவனாக எண்ணி, இந்நிகழ்ச்சியை எழுது.
4. அவன் **போகிறான்**, கமலம் **படிக்கிறாள்**: அவர்கள் **ஆடுகிறார்கள்**, எலி **ஓடுகிறது**, நாய்கள் **குரைக்கின்றன**. இவை இப்பொழுது நடக்கின்றதைக் குறிக்கும் வினைச் சொற்கள். எனவே, இவை **நிகழ்காலத்தில்** அறிவிப்பனவாகும்.

கண்ணன் படிக்கிறான், அண்ணன் பாடுகிறான், வள்ளி ஓடுகிறாள், தம்பி ஓடுகிறான், தங்கை சாப்பிடுகிறாள்—இவற்றுள் நிகழ் காலத்தைக் குறிக்கும் சொற்கள் எவை ?

5. போனார், வருகிறார், பாடுகிறாள், பாடினாள், வந்தான், வருகிறான், ஓடுகிறது, ஓடினது—இறந்த காலச் சொற்கள் எவை ? நிகழ்காலச் சொற்கள் எவை ?

———



17. உடற்பயிற்சி

பலவீனம்	தண்டால்	இருதயம்
மற்றவர்	தேகாப்பியாசம்	அஜீரணம்
உறுதியாய்	தசை	வியர்வை

நாம் கண்ணுடியைத் தினந்தோறும் துடைத்துக் கொண்டு இருந்தால், அது பார்ப்பதற்குப் பளபளப் பாய் இருக்கும். அதுபோலவே நமது உடலேயும் நாம் தினந்தோறும் உடற்பயிற்சியால் சுத்தம் செய்து வரு வோமானுல், அது சுறுசுறுப்பையும் இரத்த ஓட்டத் தையும் அடையும். நாள்தோறும் தவருமல் உடற் பயிற்சி செய்தல் அவசியம். அதனுல், உடலின் பல உறுப்புகள் பலம் அடைந்து நல்ல நிலேயைப் பெறும். உடற்பயிற்சி இல்லாவிட்டால் அவை பலவீனம் அடையும்.

கையைக் கொண்டு கடின வேலை செய்யும் கொல்ல னுடைய கைகளைப் பாருங்கள்; அவை மற்றவர் கைகளைவிட மிகவும் உறுதியாய் இருக்கும். தச்சன் கைகளும் ஏறக்குறைய அவ்வாறே இருக்கும். இவ்விருவரும் கைகளுக்கே அதிகமான வேலையைத் தருபவர். ஆனால், உடற்பயிற்சியால் எல்லா உறுப்புகளும் நல்ல இரத்த ஓட்டத்தைப் பெறும்; பலம் அடையும்.

உடற்பயிற்சியை நல்ல காற்று ஓட்டம் உள்ள இடங்களில் செய்தல் வேண்டும். நிமிர்ந்து நின்று கைகளை உயர்த்தியும் மடக்கியும் அடிக்கடி பல முறை தேகாப்பியாசம் செய்யவேண்டும். கால்களை மடக்கியும் நிமிர்த்தியும் வேலை செய்யவேண்டும். நிலத்தில் இரண்டு கைகளையும் ஊன்றிப் படுத்து, நிலத்தின்மீது உடல் படாமல் 'தண்டால்' செய்தல் வேண்டும். இப்படிப் பல உறுப்புகளாகிய இடுப்பு, மார்பு, கழுத்து, விலா, முதுகு முதலியவை பலம் பெறும்.

உடற்பயிற்சியால் தசைகள் பருத்துக் கெட்டியாகின்றன. சுவாசப் பைகளும் அதிகமாக வேலை செய்கின்றன. நாம் விரைவாக மூச்சு விடுகிறோம். நற்காற்றை மிகுதியாக உட்கொள்வதால், நமது இரத்தம் தூய்மை அடைகிறது. உடற்பயிற்சியால் இருதயம் விரைவாகத் துடிக்கும். அவ்வாறு துடிப்பதால் உடலின் ஒவ்வொரு பாகத்துக்கும் அதிக இரத்தம் ஓடும்.

உடற்பயிற்சியால் நல்ல பசி உண்டாகும்; சுவையுள்ள உணவை நாம் உட்கொள்ளலாம்; அஜீரணம்

முதலிய நோய்கள் தலைகாட்டா; குடலைப்பற்றிய நோய்கள் உடற்பயிற்சி செய்வோரை நெருங்கா. உடற்பயிற்சியால் வியர்வை மிகுதியாக உண்டாகும். அப்படி உண்டாவதால், இரத்தம் சுத்தம் அடைகின்றது.

தண்ணீரில் நீந்துதல் சிறந்த உடற்பயிற்சி ஆகும். ஓடுதல், பந்து விளையாடுதல், சைகிள் ஊர்தல், ஆடுதல், பாடுதல் முதலியவைகளும் உடற்பயிற்சிகளே ஆகும்.

பிள்ளைகளே, இத்தகைய சிறந்த உடற்பயிற்சி முறைகளில் உங்களுக்குத் தகுந்தவற்றைத் தேர்ந்து, அவற்றைத் தினந்தோறும் செய்து, நல்ல உடலைப் பெற்றுச் சுகமாக வாழுங்கள்.

கேள்விகள்

1. உடற்பயிற்சிக் குரியவை எவை?
2. அவற்றைச் செய்வதால் எப்படி நன்மை உண்டாகும்?
3. எப்பொழுது அதிக இரத்தம் ஓடும்?
4. இரத்தம் சுத்தம் அடைவது எப்பொழுது?

பயிற்சி

1. உடற் பயிற்சியைப் பற்றி 10 வாக்கியங்கள் எழுது.
2. உங்கள் பள்ளிக்கூடப் பயிற்சியைப் பற்றி 12 வரிகள் எழுது.
3. உங்கள் பள்ளிக்கூட விளையாட்டுகளைக் கூறு.
4. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

5. இரண்டாம் பாராவில் உள்ள வினைமுற்றுகள் எவை ?
6. நான்காம் பாராவில் உள்ள ஒருமை—பன்மை கூறு.
7. வினைமுற்றுகளைக் காலவரியாகக் கூறு:—வந்தான், போவான், பேசுகிருர், ஆடுகிறது, வருவார்கள், எழுதினன், சொல்லுகிருன், ஓடுகின்றன, ஆடுவார்.
8. வேறு சொல் கூறு:—
வியாதி, ஜீரணம், தேகாப்பியாசம், தசை.
9. எதிர்ச்சொல் கூறு:—
பருத்து, பசி, நோய், விரைவாக, பெறும்.

---

18. கள்வனை ஏமாற்றிய கந்தன்

திண்ணனூர்	**என்ருல்**	**துளைக்கும்**
வேளாண்மை	**நஞ்சுக்கொடி**	**தோப்பென்று**
திரண்ட	**சுருணை**	**சிப்பம்**

கந்தன் திண்ணனூரில் பெரிய வேளாண்மைக் காரன். அவன் ஒவ்வோர் ஆண்டும் நெல்லை விற்றுத் திரண்ட பொருளைச் சேர்த்து வைத்திருந்தான். அவன் மனைவி கமலம் படித்தவள். அவள், கணவன் மனம் போல நடப்பவள்.

அவர்கள் வீட்டில் நுழைந்து சொத்தைக் கவர்ந்து செல்லக் கள்வர் சமயம் பார்த்து இருந்தனர். கந்தனும் இதனை அறிவான். அவன் கள்வர் வந்தால்

எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றித் தன் மனைவிக்குச் சொல்லி இருந்தான்.

ஓர் இரவு கள்வன், சுவரில் துவாரம் செய்யும் ஓசை கேட்டது. கந்தன் திடீரென்று விழித்துக்கொண்டான்; தன் மனைவியை எழுப்பினான்; விஷயத்தைத் தெரிவித்தான்.

கந்தன் உரத்த குரலில், 'கமலம், நீ ஏன் இன்னும் தூங்காமல் இருக்கிறாய்?' என்று கேட்டான். அவள், 'எந்தச் சமயத்தில் கள்வன் நமது பொருளைக் கொண்டு போவானோ என்ற கவலையே எனக்குப் பெரிதாய் இருக்கின்றது. நீங்கள் அந்தப் பொருளை வீட்டில் வைத்திருக்கலாமா?' என்று கூறிக் கடிந்தாள்.

கந்தன், 'கமலம், நான் பொருளை வீட்டில் வைப்பேனா? என்னை மூடன் என்று நினைக்கிறாய்? கோவிலுக்கு எதிரில் உள்ள ஆலமரத்தின் மூன்றாம் கிளையின் உச்சியில் நமது பொருளை எல்லாம் ஒரே மூட்டையாகக் கட்டித் தூக்கிவிட்டேன். அது அங்குத்தான் இருக்கின்றது. நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டா. அது நமது பொருள் என்பது யாருக்குத் தெரியும்? அது மாடுகளின் நஞ்சுக்கொடி கட்டப்பட்டுள்ள வைக்கோல் சுருணையைப் போலத் தொங்கிக்கொண்டு இருக்கிறது,' என்றான்.

கந்தன் இப்படிச் சொன்னதும், சுவரைத் துளைக்கும் ஓசை நின்றது. ஏன்? திருடன் கந்தன் கூறியதைக் கேட்டதும் ஆலமரத்தை நோக்கி ஓடினான்.

இதையறிந்த கந்தனும் அவன் மனைவியும் மெதுவாகச் சென்று, ஆலமரத்தண்டை ஒளிந்துகொண்டனர்.

திருடன் மரத்தின்மீது ஏறி, மூன்ளும் கிளையை அடைய முயன்றான். மூன்ளும் கிளை மிகவும் மெல்லியதாய் இருந்தது. அதனால், அவன் இரண்டாம் கிளையில் நின்றுகொண்டு மேலே பார்த்தான். கந்தன் கூறியதைப்போல மூட்டை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது.

கள்வன் மூன்ளும் கிளையை நோக்கி மெதுவாக உயர்ந்து தொங்கிக்கொண்டிருந்த அம்மூட்டையைப் பிடித்தான். அவன் பிடித்து இழுத்தவுடனே அது கையோடு வந்துவிட்டது. அப்படித் திடீரெனக் கையோடு வந்ததும், கள்வன் நிலை தவறித் 'தொப்' என்று கீழே விழுந்தான்.

கள்வன் எங்கு விழுந்தான்? பாவம்! அவன் ஆலமரத்துக்கு எதிரேயும் இரண்டாம் கிளைக்கு நேர் கீழேயும் இருந்த ஆழமான குளத்தில் வீழ்ந்தான். அக்குளம் இருப்பதைக் கள்வன் முற்றிலும் மறந்துவிட்டான். பாவம்! அவன் நீந்தத் தெரியாத கள்வன். அவன் அக்குளத்தில் முழுகி முழுகி மாண்டான்.

அவன் கையிற் பிடித்திருந்தது யாது? அதுவே மாடுகளின் நஞ்சுக்கொடி கட்டப்பட்டிருந்த வைக்கோல் சிப்பம். அதைக் கந்தனது செல்வம் என்று எண்ணிக் கள்வன் ஏமாந்தான்.

கேள்விகள்

1. கந்தன் கள்வனை எப்படி ஏமாற்றினான்?
2. கந்தன்—கமலம் சம்பாஷணை யாது?
3. கள்வன் ஏன் மாண்டான்?
4. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. சுருளை, தொப்பென்று, சிப்பம், வேளாண்மை-திரண்ட.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. இப்பாடத்தை **மௌனமாகப்** படி; பாராக்கட்குத் **தலைப்புக்** கொடு.
3. மாண்டான், கூறியது, பார்த்தான், வீடு.—வேறு சொல் கூறு.
4. அது யாருக்குத் தெரியும்
   அது எனக்குத் தெரியும்
   உனக்குத் தெரியுமா
   ஆம் எனக்குத் தெரியும்
   ஒவ்வொன்றன் கடைசியிலும் தக்க குறி இடு.
5. இப்பாடத்தில் உள்ள வினைமுற்றுகளைக் கால வாரியாகப் பிரி.
6. கள்வன், இருவர், நஞ்சுக்கொடி.—என்னென்ன பெயர்கள்?
7. கந்தா, கமலா, திருடா, சண்முகா.—இவற்றின் சாதாரண வடிவம் என்ன?
8. இப்பாடத்தை **நாடகமாக நடித்துக் காட்டு.**



19. நிலக்கரியும் மண் எண்ணெயும்

நிலக்கரி	வெட்டுவார்	மின்சாரம்
பாறை	செல்லச்செல்ல	தொழிற்சாலை
எண்ணெய்	மண்ணும் மணலும்	நீராவி
சாதனம்	இறுகி	புதையுண்ட
சக்தியால்	சுரங்கம்	பாக்கியம்

நிலத்தில் இருந்து தோண்டி எடுக்கப்படும் கரி 'நிலக்கரி' எனப்படும். அது பாறை பாறையாய் நிலத்தின் அடியில் இருக்கும். மனிதர், அதனை வெட்டி எடுத்துப் பல வழிகளில் பயன்படுத்துகின்றனர். அது தண்ணீரை நீராவியாக மாற்றி இரயிலை ஓடச் செய்கிறது; கப்பலைக் கடலில் போகச் செய்கிறது. பெரிய தொழிற்சாலைகளில் இயந்திரங்களை ஓட்டுவ

தற்கும் பிறவற்றுக்கும் சில இடங்களில் நிலக்கரி பயன்படுகிறது.

உலக வியாபாரம் இரயில் வழியாகவும் கப்பல்கள் வழியாகவுமே நடக்கின்றது. இவ்விரண்டு சாதனங்களும் நிலக்கரியின் சக்தியாலேதான் ஓடுகின்றன. எனவே, நிலக்கரியின் துணை, உலக வியாபாரத்துக்கு எவ்வளவு அவசியம் என்பது விளங்குகின்றது அல்லவா ?

இனி, இந்நிலக்கரி எப்படி உண்டாகிறது என்பதைக் கவனிப்போம். நிலக்கரி இப்பொழுது கிடைக்கின்ற இடங்களில் எல்லாம் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் பெருங் காடுகள் இருந்தன. அக்காடுகளில் இருந்த மரங்கள், வெட்டுவார் இல்லாமல், நாளடைவில் விழுந்து, பூமியில் புதையுண்டன. காலம் செல்லச் செல்ல மேலும் பல மரங்கள் மேற்சொன்ன மரங்கள் இருந்த இடங்களில் தோன்றி, நாளடைவில் பூமிக்குள் மறைந்தன.

வருஷங்கள் ஆக ஆக, மரங்களின் பல பாகங்களும் மண்ணும் சேர்ந்து பூமியில் புதையுண்டன. அவற்றுக்குமேல் மண்ணும் மணலும் மூடிக்கொண்டன. இவ்வாறே அவ்விடங்களில் மரப்பாகங்களும் அவற்றுக்கு மேல் மண்ணுமாகப் பல அடுக்குகள் உண்டாயின.

இவ்வாறு உண்டான மண்ணடுக்குகள் நாளடைவில் பாறைகள் ஆகவும், மரப்பாகங்கள் நிறைந்த

அடுக்குகள் பூமியின் அழுத்தும் சக்தியால் இறுகிக் கரிப் பாறைகளாகவும் மாறின. இப்பொழுதும் நிலக் கரி வெட்டப்படும் இடங்களில் பார்த்தால், முதலில் மண் அடுக்கும் அதற்குக் கீழே கரி அடுக்கும் இருப் பதைக் காணலாம்.

நிலக்கரி இருக்கும் இடங்களில் சுரங்கங்களை உண் டாக்கி, சுரங்க வழியாக வேலையாட்கள் சுரங்கத்துள் சென்று, கரியை வெட்டி எடுக்கிறார்கள். அவர்கள் மேல் மண்ணைத் தோண்டி அப்புறப்படுத்தி, உள்ளே இருக்கும் கரியைக் கூர்மையான இரும்புக் கோடரி யால் வெட்டி எடுக்கிறார்கள்; பெரிய கரிப்பாறைகளைப் பெயர்க்கக் கடப்பாரையை உபயோகிக்கிறார்கள்.

சுரங்கங்களில் நல்ல வெளிச்சம் இருக்கவேண் டும். அதற்காகச் சுரங்க அதிகாரிகள் மின்சார விளக்குகளை இப்பொழுது உபயோகப்படுத்துகிறார்கள்; வேலையாட்களுக்குச் சுத்தமான காற்றைத் தர மின்சார விசிறிகளை வைத்திருக்கிறார்கள். அவ்விசிறிகள் சுரங் கத்துள் உள்ள விஷக்காற்றை வெளியே தள்ளி, வேலையாட்களுக்கு நல்ல காற்றைத் தருகின்றன.

நமது இந்திய நாட்டில் பல மாகாணங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கான வேலையாட்கள் வேலை செய்கிறார் கள். இங்கு எடுக்கப்படும் நிலக்கரி நமது நாட்டில் உள்ள பெரிய தொழிற்சாலைகட்கும், நீராவிக் கப்பல் கட்கும், புகைவண்டித் தொடர்கட்கும், பிறவற்றுக்கும்

மிகுதியாகச் செலவாகின்றது. மிகுதியை வருஷந் தோறும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

பூமியில் புதையுண்ட மரங்களில் இருந்து கசிந்து வெளி வந்த—வருகின்ற—எண்ணெயே விளக்கு எரிக்கப் பயன்படும் மண் எண்ணெய் என்பது. இத்தகைய மண் எண்ணெய் தேங்கி இருக்கும் இடங்களில் பெரிய கிணறுகள் வெட்டப்பட்டு, எண்ணெய் எடுக்கப்படுகின்றது. படத்தில் இருப்பது மண் எண்ணெய் சேர்த்து வைக்கப்பட்டுள்ள சிறிய குளம் ஆகும். மண் எண்ணெய்க் கிணறுகள் பர்மாவில் மிக்குள்ளன.

இயற்கையான நிலத்தில் இருந்து கிடைக்கும் அரிய பொருள்களில் உயர்ந்தன நிலக்கரியும் மண் எண்ணெயுமே. இவற்றை நமது தாய் நாடு பெற்றிருப்பது நமது பாக்கியம் என்றே கூறவேண்டும்.

கேள்விகள்

1. நிலக்கரி எப்படி உண்டாகிறது ?
2. அஃது எப்படி எடுக்கப்படுகிறது ?
3. நிலக்கரிச் சுரங்கம் என்பது யாது ?
4. மண் எண்ணெய் எப்படி உண்டாகிறது ?
5. அஃது எங்கே கிடைக்கிறது ?
6. இந்த இரண்டாலும் என்ன பயன் ?

பயிற்சி

1. நிலக்கரி, மண் எண்ணெய்—இவைபற்றி இரண்டு பாராக்கள் எழுது.
2. ஒவ்வொரு பாராவுக்கும் தலைப்புக் கொடு.
3. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

4. அதில் உள்ள நிகழ்கால வினைமுற்றுகளைக் கூறு.
5. மூன்றும் பாராவில் உள்ள எழுவாய்களைக் கூறு.
6. ஆறும் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
7. ஏழாம் பாராவில் உள்ள ஒருமை—பன்மை கூறு.
8. ஒன்பதாம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்கள் என்னென்ன பால்களைச் சேர்ந்தவை ?
9. கடப்பாரையின் உபயோகம்பற்றி 6 வரிகள் எழுது.
10. நீ கண்ட தொழிற்சாலை ஒன்றைப்பற்றிச் சில வரிகள் எழுது.

---

20. எனது வேலை

1. காலையிலே எழுந்திருப்பேன்
கடவுளை நான் தொழுவேன்;
காலைக்கடன் முடித்தபின்னர்க்
கருத்துடனே குளிப்பேன்.

2. கந்தைத்துணி ஆனாலும்
கசக்கி நன்றாய்த் துவைப்பேன் ;
'கண்ணே!' எனும் அன்னை தரும்
கூழ்தனையே குடிப்பேன்.

3. பாடங்களைத் தவறாமல்
படித்திடுவேன் நன்றாய் ;
பள்ளிக்கூடம் தவறாமல்
போவேன்எந் நாளும்.

4. ஆசிரியர் வினவிடில் நான்
அறைந்திடுவேன் நன்ருய் ;
'ஆ! ஆ! ஆ! நல்லபையன் !
என அறைவார் அவரும்.

5. நடுப்பகலில் வீடுசெல்வேன்
நகைமுகத்தோ டேநான் ;
நல்லுணவை அன்னைதர
உண்பேன்களிப் போடே.

6. மீண்டுபள்ளிக் கூடம்சென்றே
மேவிடுவேன் வகுப்பை ;
ஆண்டுநடப் பனவற்றை
அமைவுறவே கேட்பேன்.

7. மாலையிலே விளையாடல்
மகிழ்ச்சிதரும் ஒன்ரும் ;
காலையிலே படித்திடுதல்
களிப்புத்தரும் ஒன்ரும்.

8. இரவினிலும் படித்திடுதல்
ஏற்றதென்றே படிப்பேன் ;
இறைவனையான் தொழுதிட்டே
இன்புடனே படுப்பேன்.

9. என்னைப்போல வேலை செய்வோர்
எழிலுறுவர் என்றே
தினந்தோறும் பிள்ளைகட்கே
தெளிப்பதென்றன் தொழிலே.

அரும்பதவுரை :

வினவிடில்	—	கேள்வி கேட்டால்
அறைந்திடுவேன்	—	சொல்வேன்
களிப்பு	—	சந்தோஷம்
மேவிடுவேன்	—	பொருந்திடுவேன்
அமைவுறவே	—	நிதானமாக (கவனத்தோடே)
எழிலுறுவர்	—	நன்மை அடைவர்
தெளிப்பது	—	அறிவிப்பது

பயிற்சி

1. இப்பாடங்களின் கருத்தை விடாமல் சுருக்கி எழுது.
2. தவருமல். கருத்துடனே, நகைமுகத்தோடு, களிப்போடு.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
3. கண்ணே, அம்மா, அப்பனே, ஐயா.—இவற்றின் சாதாரண உருவம் என்ன?
4. இப்பாடலை நடித்துக் காட்டு.
5. மாலை, இன்பம் களிப்பு, நடப்பன.—எதிர்ப்பதம் கூறு.
6. சந்தோஷத்தைக் குறிக்கும் சொற்களை இப்பாடத்திலிருந்து காட்டு.
7. தாய், உபாத்தியாயர், சாப்பாடு, சாப்பிடுவேன்.—இவற்றைக் குறிக்கப் பாட்டில் வந்துள்ள சொற்களைக் கூறு.
8. வந்தான், வருவாள், போகிறார், தூங்கினது,விழுவார் என்னென்ன காலத்தைக் குறிக்கின்றன?

21. பச்சையப்ப முதலியார்

ஆங்கிலேயர்	பச்சையப்பர்	சிவாலயம்	தர்மங்கள்
ஏற்பட்டு	பூச்சியம்மாள்	திருப்பணி	கல்விச்சாலை
நூற்றைம்பது	தமக்கை	சீமான்	உயர்கலாசாலை
வெள்ளைக்காரர்	பவுனி	கோமளேஸ்வரன்	தேறினர்
பாஷை	நாராயணப்பிள்ளை	சிவனடியார்	ஸ்தாபனம்
இலாபம்	தரகராய்	சாஸனம்	பிரபுக்கள்
துவிபாஷி	நிக்கோலஸ்	இராமேசுவரம்	மறவார்கள்

ஆங்கிலேய அரசாங்கம் நமது நாட்டில் ஏற்பட்டுச் சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் ஆகின்றன. அப்

பொழுது நமது நாட்டில் வெள்ளைக்காரர் வியாபாரிகளாய் இருந்தனர். அவர்களுக்கு நமது நாட்டுப் பாஷைகள் தெரியா. அதனால், நம்மவர் பலர், அவர்களுடைய ஆங்கில பாஷையைக் கற்று, அவர்களுக்கு வியாபாரத்தில் உதவி செய்து வந்தனர்.

நமது நாட்டுப் பொருள்களை ஆங்கிலேயர்க்கு வாங்கித் தருவதுதான் இவர்கள் வேலை. இப்படி வாங்கித் தருவதில் நல்ல லாபம் கிடைக்கும். இத்தொழில் செய்பவருக்குத் 'துவி பாஷிகள்' என்பது பெயர்; அதாவது, நமது பாஷை, ஆங்கிலபாஷை ஆகிய இரண்டிலும் பேசத் தெரிந்தவர்கள் என்பது பொருள். இத் துவி பாஷிகளுள் பச்சையப்ப முதலியார் ஒருவர்.

பச்சையப்பர் மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் தாயார் வயிற்றில் இருந்தபோதே தந்தையார் இறந்துவிட்டார். அவர்தாயார் 'பூச்சியம்மாள்' என்பவர். அவர் பச்சையப்பரையும் அவருடைய தமக்கைமார் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்தார்; பவுனி நாராயணப் பிள்ளை என்னும் பிரபுவினிடம் தங்கிப் பச்சையப்பரைப் படிக்கவிட்டார்.

பச்சையப்பர் தமிழ், தெலுங்கு இரண்டிலும் பேசவும் எழுதவும் கற்றார்; ஆங்கிலம் பேசக் கற்றார். பின்னர் அவர், வியாபாரிகளிடம் தரகராய் இருந்து, சிறிது பொருளைச் சம்பாதித்தார். அந்நிலையிலேயே அவர் எளியவர்க்குத் தருமம் செய்யலானார். பிறகு

முதலியார் 'நிக்கோலஸ்' என்னும் வர்த்தகரிடம் துவிபாஷியாராய் இருந்து பெரும்பொருள் சம்பாதித்தார்; அதில் பெரும்பாகத்தைக் காஞ்சியில் உள்ள சிவாலயத் திருப்பணியில் செலவிட்டார்.

முதலியார் ஆங்கில அரசாங்கத்தாருக்கு உதவியாளராய் இருந்து மிகுந்த பொருள் சேர்த்தார்; தஞ்சாவூர் அரசனுடைய பகுதிப் பணத்தை அரசாங்கத்தார்க்கு ஒழுங்காகச் செலுத்தும் காரியஸ்தராகி, அம்முயற்சியில் மிகுந்த இலாபத்தை அடைந்தார்; செல்வச் சீமான் ஆனுர்.

முதலியார் முதலில் தமது மூத்த சகோதரியாரின் மகளையும் பிறகு வேருெரு பெண்ணையும் மணந்து கொண்டார்; சென்னையைச் சேர்ந்த கோமளேஸ்வரன் பேட்டையில் ஒரு மாளிகை கட்டினுர்; அதில் சில காலமும் தஞ்சாவூரில் சிலகாலமும் வசித்து வந்தார்.

அவர் ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவர்; சிறந்த சிவ பக்தர்; ஸ்தல யாத்திரை செய்பவர்க்குப் பொருள் உதவி செய்து வந்தார்; சிவனடியார்க்கு உணவு முதலியன அளித்து வந்தார்; சிதம்பரத்தில் கோயில் பணிகள் செய்வித்தார்; ஓர் இரதம் செய்வித்தார்; ஆண்டுதோறும் ஆனித் திருமஞ்சன விழா நடத்தினுர். இன்றும் அவரது தர்மம் அவ்விழாவில் பயன் படுகின்றது.

முதலியார் 1794-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆந் தேதி, தமது நாற்பதாம் வயதில் காலமானுர். அப்போது அவர் எழுதி வைத்த மரண சாஸனத்தின் படி காசி முதல் இராமேசுவரம் வரையில் அவருடைய தர்மங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

இவை யாவற்றையும்விடச் சிறந்த தருமம், அவர் பெயரால் நடைபெற்று வரும் கல்விச் சாலைகளேயாம். சிதம்பரத்தில் ஓர் உயர்கலாசாலையும், காஞ்சிபுரத்தில் ஓர் உயர்கலாசாலையும், சென்னையில் ஓர் உயர்கலாசாலையும் கல்லூரியும் அவர் பெயரால் நடக்கின்றன. இவைகளில் ஆயிரக்கணக்கான மாணவர் படித்துத் தேறினர்; இப்பொழுதும் பலர் தேறுகின்றனர்; இனியும் தேறுவர்.

உலகத்தில் கணக்கற்ற மனிதர்கள் பிறந்தார்கள்; இருந்தார்கள்; இறந்தார்கள். அவர்கள் பெயர்கள் எல்லாம் நமக்குத் தெரியுமோ? பச்சையப்பர் என்றும் அழிய முடியாத தர்மஸ்தாபனங்களை ஏற்படுத்தியதால் அல்லவா அவரது வரலாற்றை இன்றும் நாம் படிக்கிறோம்? பொது மக்கள் சுகத்துக்குத் தமது பணத்தைச் செலவிடும் பிரபுக்களையே மக்கள் மறவார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறதன்றோ?

கேள்விகள்

1. பச்சையப்பர் யார்?
2. 'துவிபாஷி' என்பதன் பொருள் என்ன?

3. துவிபாஷியின் வேலை என்ன ?
4. பச்சையப்பர் யார் யாரிடம் வேலை பார்த்தார் ?
5. அவர் எப்படிப் பொருள் சேகரித்தார் ?
6. அவர் செய்த அறச் செயல்கள் எவை ?
7. அவர் பெயர் நிலைத்திருக்கக் காரணம் என்ன ?

பயிற்சி

1. இப்பாடத்தை **மௌனமாகப்** படி ; பாராக்கட்குத் **தலைப்புக்** கொடு.
2. இப்பாடத்தைச் சுருக்கி எழுது.
3. பச்சையப்பர் அறச்செயலைப்பற்றி 12 வரிகள் எழுது.
4. நீ பச்சையப்பராக நினைந்து இப்பாடத்தை மாற்றி எழுது.
5. 9-ஆம் பாராவில் உள்ள வினைமுற்றுகட்குக் **காலம்** கூறு.
6. 10-ஆம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
7. முதற் பாராவில் உள்ள ஐந்து பால்களை க்கூறு.
8. இரண்டாம் பாராவில் உள்ள ஒருமை—பன்மை கூறு.

---

22. கதைப் படம்

படம் பார்த்து விஷயம் சொல்.



பயிற்சி

1. இந்நிகழ்ச்சியை 8 வாக்கியங்களிற் சொல்.
2. நீ பையனாக நினைந்து இந்நிகழ்ச்சியைச் சொல்.
3. நீ கிழவியாக இருந்து இந்நிகழ்ச்சியைச் சொல்.
4. நீ போலீசாராக இருந்து இதனைக் கூறு.
5. கண்ணன் குழல் ஊதினான், கிழவி சந்தியைக் கடந்தாள், கமலம் பாட்டைப் பாடினாள், அவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள், குஞ்சு இரை தின்னுகிறது. —இவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.
6. இவற்றில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
7. அவற்றைப் பால் வாரியாக எழுது.
8. ஒருமை பன்மை கூறு.
9. வினைமுற்றுகட்குக் காலம் கூறு.
10. இந்நிகழ்ச்சியை நடித்துக் காட்டு.



23. பட்டுத் தொழில்

அணிந்துகொள்ளும்	பட்டுப்பூச்சி	பெரும்பாலார்
ஆச்சரியப்படுவீர்கள்	தொழிலாளர்	பட்டுநூற்காரர்
படுக்கைக்காக	பட்டாடை	இராச்சியம்
சீனர்	யந்திரச்சாலை	மிகுதியாக
ஐரோப்பியர்	நெய்யப்பட்டு	தயாரிக்க
		இட்டாலி

பிள்ளைகளே, நாம் அதிக விலைகொடுத்து வாங்கி ஆசையோடு அணிந்து கொள்ளும் பட்டாடைகள், ஒரு வகைப் புழு, தன் கூட்டை அமைக்கும் நூலால் ஆனவை என்பதை அறிய நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் அல்லவா? ஒரு சிறிய புழு தனது படுக்கைக்காக நூற்கும் நூல்தான் 'பட்டு' என்பது.

பட்டு முதலில் சீன தேசத்திலேதான் உண்டாகி இருந்தது. பட்டுப் புழுவின் நூலால் பட்டு உண்டாவதைச் சீனர்தாம் முதலில் அறிந்திருந்தனர். பிறகு ஐரோப்பிய நாட்டார் அந்த இரகசியத்தை அறிந்துகொண்டனர்; பட்டுப் புழுக்களை உற்பத்தி செய்யலாயினர். இப்பொழுது எல்லா நாடுகளிலும் பட்டுத் தொழில் நடைபெறுகிறது; பட்டுப் புழுக்கள் வளர்க்கப்படுகின்றன; ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் பட்டுத் தொழிலில் கவனம் செலுத்தி வருகின்றது.

முசுக்கட்டை இலையே பட்டுப் புழுவுக்குச் சிறந்த உணவாகும். அந்த இலையிலே அது தன் கூட்டை அமைக்கும்; முட்டையில் இருந்து புழு உண்டாகும். புழு, கூட்டை அமைக்கும்; புழு, பெரிதாகிப் பறக்கும் பூச்சியாகமாறும். அப்போது தான் அதற்குப் 'பட்டுப் பூச்சி' என்பது பெயர்.

ஒரு கூட்டில் உள்ள நூலைப் பிரித்து அளந்தால், அதன் நீளம் சுமார் முந்நூறு முதல் ஐந்நூறு கஜம் வரையில் இருக்கும். பட்டுத் தொழிலாளர் அவ்வாறு உள்ள பல கூடுகளின் நூலைப் பிரித்து இயந்திரத்தின் உதவியால் புரிகளாகவும் கட்டுகளாகவும் கட்டி, ஆடைகள் நெய்யும் இயந்திரச் சாலைகட்கு அனுப்புவர். அச்சாலைகளில் அவை சிறந்த பட்டாடைகளாக நெய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

சென்னை மாகாணத்தில் மதுரை, திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் பட்டு நூல் நெசவு அதிகமாக நடைபெறுகிறது. இதனைச் செய்வோர் பெரும்பாலார் 'பட்டு நூற்காரர்' எனப்படுவர். மைசூர் இராச்சியத்தில் பட்டு உண்டாக்கப்படுகிறது. அங்குப் பட்டுப் பூச்சிகளை மிகுதியாக வளர்க்கிறார்கள்.

ஐரோப்பாவில் உள்ள பெரும்பாலான நாடுகளில் பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது; இயந்திர உதவியால் பட்டாடைகளும் தயாரிக்கப்படுகின்றன. ஜப்பான் தேசம் அளவுக்கு அதிகமாகப் பட்டாடைகளைத் தயாரித்து, வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்கின்றது. பட்டாடைகளைத் தயாரிப்பதில் இட்டாலி நாடும் பெயர் போனது.

கேள்விகள்

1. பட்டு எப்படி உற்பத்தியாகிறது?
2. பட்டு எப்படி எடுக்கப்படுகிறது?
3. பட்டு எப்படித் தயாரிக்கப்படுகிறது?
4. சென்னையில் பட்டுத்தொழில் எங்கு நடைபெறுகிறது?
5. பட்டுத் தொழில் செய்யும் வெளிநாடுகள் எவை?

பயிற்சி

1. படுக்கைக்காக, சீனர், பெரும்பாலார், தயாரிக்க, இட்டாலி இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பட்டுப் பூச்சியைப் பற்றி 12 வரிகள் கூறு.
3. பட்டுத் தொழிலைப் பற்றி 12 வரிகள் கூறு.
4. இரண்டாம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
5. அதில் உள்ள வினை முற்றுகளைக் கூறு.
6. அவ்வினை முற்றுகளின் காலங்களைக் கூறு.
7. அப்பாராவில் உள்ள ஒருமை-பன்மை கூறு.
8. இப்பாடத்தில் உள்ள இடப்பெயர்களைக் குறி.
9. i. வெண்மை, நன்மை, கருமை, வன்மை முதலிய பெயர்கள் **குணப்பெயர்கள்** எனப்படும்.

   ii. ஆவணி, பகல், மாதம், வருஷம், நாள் **காலப் பெயர்கள்**.

   iii. வால், கை, கால், தலை, விரல் முதலியன **சினைப் பெயர்கள்**.

---

24. வேலனும் வீட்டு வேலையும்

தொழுவான்	**மொள்ளுதல்**	**முகமலர்ச்சி**	**இருப்பாயா**
கிணற்றில்	**பதார்த்தங்கள்**	**பிறவற்றை**	**ஒழுங்காக**

வேலன் காலையில் நான்கு மணிக்கு எழுந்து விடுவான்; உடனே முகம், கை, கால்களைச் சுத்தம் செய்து கொண்டு, கடவுளைத் தொழுவான். பிறகு அவன் தன் பாடங்களைப் படிப்பான். ஆறு மணிக்குமேல் வீட்டுக்கு வேண்டும் நீரைக் கிணற்றில் இருந்து மொள்ளுவான்.

அவன் தாயார் மிகவும் நல்லவர். அவர் வேலனைத் தம் உயிரினும் மேலாக நேசிப்பவர். ஏன்? வேலன் நல்ல பிள்ளை. அவன் தன் பாடங்களை ஒழுங்காகப்

படித்து வருபவன் ; மேலும், தன் தாயாருக்குப் பல வழிகளிலும் உதவி புரிபவன்.

ஏழரை மணி வரையிலும் வேலன் வீட்டுக் கணக்குப் போடுவான். பின்னர் அவன் கடைக்குச் சென்று சமையலுக்கு வேண்டும் பதார்த்தங்களை வாங்கி வருவான். தாயார் எந்த வேலை செய்யும்படி கட்டளையிட்டாலும், 'இதோ செய்கிறேன்' என்று வேலன் முக மலர்ச்சியோடு கூறுவான்.

ஒரு நாள் வேலனுடைய அத்தை அவன் வீட்டுக்கு வந்திருந்தாள். அவள் வேலனுடைய வேலைகளைக் கவனித்துச் சந்தோஷம் அடைந்தாள். அவள் தன் வீட்டுக்குச் சென்றதும், தன் இரண்டு பிள்ளைகளிடம் வேலன் செய்யும் வீட்டு வேலைகளைக் கூறினாள்.

அவளுடைய இரண்டு பிள்ளைகளும் வேலன் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்கள் தினந்தோறும் காலையில் ஏழு மணிக்கே எழுந்திருப்பவர்கள்; பாடங்களைப் படிக்காத சோம்பேறிகள்; பள்ளிக்கூடத்தில் எந்நேரமும் பெஞ்சுமேல் நிற்பவர்கள்.

அவர்கள், வேலன் காலையில் எழுந்து கடவுளைத் தொழுவதையும், பாடங்களைப் படிப்பதையும், நீர் முகந்து வருவதையும், பிறவற்றையும் கவனித்தார்கள்; வேலனுடைய தாய் தந்தையர் வேலனிடம் மிகவும் அன்பாய் இருப்பதையும் கண்டார்கள்; வேலன், வகுப்பில் முதல்வனாய் இருப்பதையும் அறிந்தார்கள்.

அப்பொழுதுதான் அவ்விருவருக்கும் நல்லறிவு வந்தது. அவர்கள் உடனே தங்கள் தாயாரிடம் சென்றார்கள்; தாயாரை வணங்கி, 'அம்மா, நாங்கள் இன்று முதல் வேலனைப்போல நடப்போம்; நல்ல பிள்ளைகள் எனப் பெயர் எடுப்போம்.' என்றார்கள்.

அவ்விருவரும் அன்று முதல் வேலனைப்போலக் காலையில் எழுந்து எல்லா வேலைகளையும் செய்து வந்தனர்; வகுப்பில் முதல்தரப் பிள்ளைகளாய் விளங்கினர். தம்பீ, நீயும் அவர்களைப்போல நல்ல பிள்ளையாய் இருப்பாயா?

கேள்விகள்

1. வேலன் காலையில் செய்யும் வேலைகள் எவை?
2. வேலன் நடுப் பகலில் செய்யும் வேலைகள் எவை?
3. அவன் மாலையில் செய்யும் வேலைகள் எவை?
4. அவன் இரவில் செய்வன யாவை?
5. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. முதல் இரண்டு பாராக்களில் உள்ள எ. ப. செ. கூறு.
2. மூன்றாம் பாராவில் உள்ள ஐம்பாற் சொற்களைச் சொல்.
3. 4-ஆம் பாராவில் உள்ள ஒருமை பன்மை கூறு.
4. 5-ஆம் பாராவில் உள்ள வினைமுற்றுகளைக் கூறு.

5. இப்பாடத்தில் உள்ள வினைமுற்றுகளை எழுது; அவற்றின் காலங்களைக் கூறு.
6. அன்பாய், முகந்து, மலர்ச்சி, எழுந்து.—எதிர்ப் பதம் கூறு.
7. இப்பாடத்தை **மௌனமாகப்** படி; ஒவ்வொரு **பாராவுக்கும்** தலைப்புக் கொடு.
8. **வற்றல்** (வற்றுதல்), **துவைத்தல்**, **பொங்கல்** (பொங்குதல்), **நிற்றல்** முதலியன தொழிலைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள். இவை **தொழிற் பெயர்கள்** எனப்படும்.

---

25. வரி வசூல்

நடைபெற	தீர்வை	விலைகூறி	கௌன்சிலர்
வருவாய்	துறைமுகம்	கக்கூஸ்	தொகை
இறக்குமதி	உரிய	உரியவை	இராணுவம்
விதிக்கும்	கார்டு	பஞ்சாயத்து	படையெடுப்பு

ஒரு குடும்பம் நடைபெறுவதற்குப் பண வருவாய் அவசியம் அல்லவா? அதுபோலவே ஓர் அரசாங்கம் நடைபெறப் பணம் அவசியமாகும். நமது நாட்டில் கிராம சபைகள், நகர சபைகள், மாகாண அரசாங்கம், இந்திய அரசாங்கம் ஆகிய இத்தனையும் நடைபெறப் பணம் தேவையாகிறது. அதற்காக இவை நம்மிடமிருந்தே நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் பணத்தை வரியாக வசூலிக்கின்றன.

உப்பு, சர்க்கரை, தீப்பெட்டி, வெளி நாட்டுத் துணிகள், சாமான்கள், கார்டு, கவர் இவற்றை நாம்

வாங்கும்போது நம்மை அறியாமல் நாம் அரசாங்கத்துக்கு வரியைச் செலுத்துகின்றோம். வெளிநாட்டுச் சாமான்கள் துறைமுகத்தில் வந்து இறக்குமதியாகின்றன. வியாபாரிகள் துறைமுகத்திலேயே அரசாங்கத்தார் விதிக்கும் தீர்வையைக் கட்டிச் சாமான்களை எடுத்துச் செல்வார்கள்.

அவர்கள் நமக்குச் சாமான்களை விற்கும்போது, தாங்கள் அரசாங்கத்துக்குக் கட்டிய தீர்வைப் பணத்தையும் தங்கட்கு உரிய இலாபத்தையும் சேர்த்தே விலை கூறி விற்கிறார்கள். ஆதலால், சாமான்களுக்கு அரசாங்கத்தார் விதிக்கும் தீர்வையை உண்மையாகச் செலுத்துவோர் நாமே அல்லவா?

இனி, நாம் அறிந்து செலுத்தும் வரிகள் எவை? வீட்டு வரி, தண்ணீர் வரி, கக்கூஸ் வரி, நிலவரி முதலியன. நிலவரி, மாகாண அரசாங்கத்தார்க்கு உரியது. ஏனைய வரிகள் கிராமச் சபைகட்கும் நகர சபைகட்கும் உரியவை. ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வைகள் இந்திய அரசாங்கத்துக்கு உரியவை.

நாம் செலுத்தும் வீட்டுவரி முதலியவற்றைக் கொண்டு கிராமச் சபையார், நமது கிராமத்தில் சாலைகளைச் செப்பனிடல், விளக்குப் போடல், சுகாதாரம் கவனித்தல், வைத்தியசாலை வைத்து நடத்தல் முதலிய பொதுஜன சேவைகளைக் கவனிக்கின்றனர். இந்தச் சபையார் அடங்கிய கூட்டத்துக்குப் 'பஞ்சாயத்து போர்டு' என்பது பெயர்.

நகரசபை ஆயின், அதுவும் இவ்வரிகளை வசூல் செய்து, மேற்கூறிய வழிகளிலேயே பொதுஜன நன்மைக்கெனச் செலவழிக்கும். அங்ஙனம் நகர சபையில் இருந்து இவற்றைக் கவனிப்போர் நாம் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகளே. அவர்கட்குக் 'கௌன்சிலர்கள்' என்பது பெயர்.

ஒரு நகரம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பிரதிநிதி அப்பிரிவைச் சேர்ந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நகர சபைக்கு அனுப்பப்படுவர். அவர் தமது பிரிவுக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் நகர சபையைக் கொண்டு செய்து வரவேண்டும்.

இவ்வாறே நில வரியை மாகாண சர்க்கார் நம்மிடமிருந்து வசூலிக்கிறது. அது வசூலிக்கும் தொகையைச் செலவு செய்ய மாகாணச் சட்டசபை அனுமதி தரவேண்டும். அச்சட்ட சபையிலும் நாம் தேர்ந்தெடுத்து அனுப்பிய பிரதிநிதிகளே இருக்கிறார்கள். அவர்கள் நமது நன்மையையே நினைத்து, அதற்கு ஏற்ற வழிகளிலேயே பொதுப் பணத்தைச் செலவழிக்கச் செய்வார்கள். கல்வி, சுகாதாரம், சாலைகள் போடுதல், நீர்ப்பாசன வாய்க்கால்களை வெட்டுதல், அணைகள் கட்டுதல், இராணுவம் முதலிய மாகாண சம்பந்தமான பல காரியங்கட்குப் பணம் செலவாகின்றது.

இந்திய அரசாங்கம் வசூலிக்கும் தொகையும் இவ்வாறே பொதுவாக நாட்டு நன்மைக்குச் செல

வழிக்கப்படுகிறது. நமது நாட்டைப் பிறர் படையெடுத்துப் பிடித்துக்கொள்ளாதபடி இருக்கப் பெரிய படை ஒன்றை நாம் வைத்திருக்கிறோம். அதன் செலவுக்கு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் செலவாகின்றது. சேனையில்லா நாடு, பகைவர் கையில் சிக்கிவிடுமாதலால், நாம் எப்போதும் சேனையைத் தயாராக வைத்திருப்பதும் அவசியமாக இருக்கிறது. அதனால், அதற்கு ஏற்படும் செலவும் அவசியம் அல்லவா?

கேள்விகள்

1. அரசாங்கம் நடைபெற உதவியாக உள்ள இடங்கள் எவை?
2. நாம் அறியாது செலுத்தும் வரிகள் எவை? அவற்றை எப்படிச் செலுத்துகிறோம்?
3. நாம் அறிந்து செலுத்தும் வரிகள் எவை?
4. எவ்வகைச் சபையாருக்கு எந்தவரிகள் உரியவை?
5. நகரசபையார் செய்யும் வேலைகள் எவை?
6. மாகாண சர்க்கார் வரியை எவற்றுக்குச் செலவிடுகின்றது?
7. இந்திய அரசாங்கம் வரியை எப்படிச் செலவிடும்?

பயிற்சி

1. துறைமுகம், இராணுவம், தொகை, விலைகூறி- இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. கடைசிப் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.
3. அதில் உள்ள ஒருமை - பன்மை கூறு.
4. அதில் இருக்கும் ஐம்பாற் சொற்களைச் சொல்.
5. அதில் உள்ள அறுவகைப் பெயர்களைக் கூறு.

26. கடிதம் எழுதும் முறை

சிரஞ்சீவி	ஆறுமுகம்	ஆசீர்வதித்து
தமக்கை	நன்முறையில்	மிகுதியாக
நன்கறிவாய்	அவா	உபதேசம்
நவராத்திரி	குன்றத்தூர்	குறையிராது
மாணிக்கம்	வாசகனூர்	

வேளாளர் வீதி,
குன்றத்தூர், 20–8–'36.

செல்வச் சிரஞ்சீவி ஆறுமுகத்தை ஆசீர்வதித்து எழுதுவது:

இங்கு, உன் அருமைத் தாயார், தமக்கை, தங்கை, தம்பி முதலியோர் சுகமாயிருக்கின்றனர். இது போல அங்கு உன் நலமும், மாமன் மாமி முதலியோர் நலமும் அறிவி. நீ உனது படிப்பில் நன்றாய்க் கவனம் செலுத்தி வருகிறாய் என்று நம்புகிறேன். நீ, இங்கு உன் தாயாரிடமும் என்னிடமும் நடந்து வந்த நன்முறையிலேயே அங்கு உள்ள மாமன் மாமியரிடமும் நடந்து வருகிறாய் என்றும் நம்புகிறேன். நீ சிறந்த அறிவுடைய பிள்ளை; ஆகையால், உனக்கு மிகுதியாகக் கூற வேண்டுவது ஒன்றும் இல்லை. நமக்கு எவ்வளவு பணம் இருப்பினும், அது கல்விக்கு ஈடாகாது என்பதை நீ நன்கறிவாய் அல்லவா?

இங்ஙனம்:

உன் அன்புள்ள தந்தை,

ச. மாணிக்க வாசகன்.

2, வள்ளுவன் தெரு, வண்ணாரப் பேட்டை,
சென்னை, 25—8—'36.

அன்புடைய தந்தையார் அவர்கட்கு வணக்கத்தோடு எழுதுவது:

இங்கு நானும் மாமன் மாமியரும் சுகமே. அவ்விடத்துச் சுகம் அறிய அவா. தாங்கள் எனக்குச் செய்துள்ள உபதேசத்தின்படி நன்றாய்ப் படித்து வருகிறேன்; நாள்தோறும் பள்ளிக்கூடம் போகிறேன். மாமன் மாமியரும் தங்களையும் தாயாரையும்விட என்னிடம் மிகுந்த அன்பு காட்டி வருகின்றனர். அவர்கள் காட்டும் அன்பு எனக்குக் கல்வியில் அதிக ஊக்கத்தைத் தருகின்றது. நான் நவராத்திரி விடுமுறையின் போது குன்றத்தூர்க்கு வருவேன். தங்கள் ஆசீர்வாதம் பெற்றுள்ள எனக்குக் கல்வியில் குறையிராது என்றே நம்புகிறேன். வணக்கம்.

இங்ஙனம்:
தங்கள் பணிவுள்ள மைந்தன்,
ஆறுமுகன்.

விலாஸம்:

திருவாளர்,
ச. மாணிக்க வாசகனார் அவர்கள்,
வேளாளர் வீதி,
குன்றத்தூர்,
செங்கற்பட்டு ஜில்லா.

பயிற்சி

1. உன் பள்ளிக்கூட விடுமுறையில் நீ எங்குப் போய், என்ன செய்ய விரும்புகிருய் என்பதைக் குறிப்பிட்டு உன் மாமனுக்கு ஒருகடிதம் எழுது.
2. உன் பள்ளிக்கூடத்தில் நடந்த சரஸ்வதி பூஜையைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
3. உன் ஊரில் நடந்த அல்லாசாமி பண்டிகையைப் பற்றி வெளியூர் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
4. உன் ஊரில் நடந்த கிறிஸ் மஸ் விழாவைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
5. முதற்கடிதத்தில் உள்ள வாக்கியங்கள் எத்தனை? அவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.
6. அதனில் உள்ள வினைச்சொற்களின் காலங்களைக் கூறு.
7. அதில் உள்ள ஒருமை பன்மைகளைக் கூறு.
8. முருகன் தை மாதத்தில் வீட்டிற்கு வெள்ளை அடித்துப் பொங்கல் இட்டான்—இதில் உள்ள பெயர்கள் வகை என்ன ?
9. அண்ணன், துக்கம், செல்வம், இறப்பு—எதிர்ப் பதம் கூறு.

காது அறுந்த நரி கறுப்பு நிறப் பூனையை இரவில் கண்டு காட்டிற்குள் ஓடி விட்டது—பெயர்ச் சொற்களின் வகையைக் கூறு.

27. போர்வீரரின் இராஜ பக்தி

கடுமையாக	போர்	சேனை	நிற்கவை
பிரிவினர்	மெச்சிய	சம்பளம்	ஆயுதச்சாலை
உடுத்துக்கொள்க	செய்யோம்	பெரிதன்று	மன்னற்காக
கீழ்ப்படியோம்	மானம்	தயாராய்	மரியாதையாக
வீராவேசம்	சமர்த்து	அடிமைகள்	இராஜபக்தி
தேசபக்தி.			

முன் ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் பாண்டிய அரசனுக்கும் சோழ அரசனுக்கும் போர் நடந்தது. பாண்டியன் தன் சேனையைப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பல இடங்களில் நிற்க வைத்தான்.

போர் கடுமையாக நடக்கையில் பாண்டிய வீரரில் ஒரு பிரிவினர் சோழனது ஆயுதச்சாலையைத் திடீரென எதிர்த்தனர். ஆனால், அவர்கள் உடனே சோழனால் பிடிக்கப்பட்டனர்.

பாண்டிய வீரரின் வீரத்தை மெச்சிய சோழன் அவர்களை நோக்கி, “நீங்கள் எனது சேனையில் சேர்ந்து விடுங்கள். உங்களுக்கு உயர்ந்த சம்பளம் தருவேன். இதோ இருக்கின்றன போர் வீரரின் ஆடைகள். இவற்றை உடுத்துக்கொள்க,” என்றான்.

அதைக் கேட்ட பாண்டிய வீரர், “அரசே! நாங்கள் ஓர் அரசரிடம் இருந்து வேறு ஓர் அரசரிடம்

உத்தியோகம் செய்யோம். எங்களுக்கு மானம் பெரியதே அன்றி உயிர் பெரியதன்று. நாங்கள் எங்கள் பாண்டிய மன்னற்காக உயிர் விடவும் தயாராய் இருக்கின்றோம். உயிருக்குப் பயந்து உமது கட்டளைக்குக் கீழ்ப்படியோம்" என்றனர்.

சோழன் அவர்கள்மீது கோபம் கொண்டான். அவன் அவர்களைப் பார்த்து, "நன்று! நன்று!! நான் மரியாதையாகக் கூறினால், நீங்கள் உங்கள் வாய்ச் சமர்த்தைக் காட்டுகிறீர்கள் போலும்! என் சேனையில் சேர்கின்றீர்களா? அல்லது உயிர் விடுகின்றீர்களா?" என்று கேட்டுக்கொண்டே தன் வாளை ஓங்கினான்.

பாண்டிய வீரர்க்கு வீராவேசம் பொங்கியது. அவர்கள் "பாண்டிய மன்னர் நீடூழி வாழ்க! இறைவர் பாண்டி மன்னரைக் காப்பாற்றுவாராக!" என்று கூறி ஆரவாரித்தனர்.

சோழன் அவ்வீரர்களைக் கொல்லும்படி தன் ஆட்களுக்குக் கட்டளை இட்டான். இராஜ பக்தியுடைய பாண்டிய வீரர் சோழனுக்கு அடிமைகள் ஆவதைவிட இறப்பதே மேல் எனத் துணிந்தனர். ஆ! அவர்களது தேசபக்தியையும் இராஜபக்தியையும் என்னெனப் புகழ்வது!

கேள்விகள்

1. சோழன் பாண்டிய வீரர்க்குக் கூறியது யாது?
2. அதற்குப் பாண்டிய வீரர் அளித்த பதில் யாது?

3. சோழன் கோபங்கொண்டு யாது கூறினன்?
4. பாண்டிய வீரர் யாது கூறி ஆரவாரித்தனர்?
5. அவர்கள் முடிவு யாது?
6. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. இந்நிகழ்ச்சியை நீ கண்டது போல எழுது.
2. இதனைச் சோழனே கூறுவது போலக் கூறு.
3. பாண்டிய வீரர் சொல்வது போலச் சொல்.
4. 6-ஆம் பிரிவில் உள்ள எ. ப. செ. கூறு.
5. 7-ஆம் பிரிவில் உள்ள வினைச்சொற்களுக்குக் காலம் கூறு.
6. 5-ஆம் பிரிவில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.
7. இப்பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறு.
8. இதில் வந்துள்ள ஐம்பால் பெயர்களைக் கூறு.
9. இதனை நாடகமாக நடித்துக் காட்டு.

28. மாணவரும் சுகாதாரமும்

வாசிப்பவர்	கேட்பவர்	மாணவர்	மாண்புடைமை
அழைக்கப்படுவர்	சுகாதாரம்	இன்னவை	திருவாசகம்
குறை கூறுவது	உறுப்புகள்	வைகறை	துயில் எழு
நேர்மாருன	அகாலம்	மரணம்	சமூகம்
உயிர்நாடி	அவசியம்	இளமை	கந்தை
பழமொழி	கைக்கொள்ளுதல்	தின்னுதல்	ஆறிய
தவறு	கண்மூடித்தனமாக	எண்ணெய்	காற்ருேட்டம்
சுறுசுறுப்பு			

பள்ளிக்கூடத்தில் வாசிப்பவர்—ஓர் ஆசிரியரிடம் பாடம் கேட்பவர் ‘மாணவர்’ எனப்படுவார். மாண்புடைமை (பெருமை)யை அறிந்து ஒழுகும் கல்வி கற்பதால் ‘பெருமை உடையவர்’ என்னும் பொருள்பட, ‘மாணவர்’ எனக் கல்வி கற்பவர் அழைக்கப்படுவர் என்று பெரியோர் கூறுவர்.

சுகாதாரம் என்பது ‘சுகத்துக்கு உரிய வழி’ எனப் பொருள்படும். நாம் சுகமாக வாழ்வதற்கு உரிய வழிகள் இன்னவை என அறிவிப்பது ‘சுகாதார போதனை’ எனப்படும். நோயின்றி வாழ வகுக்கும் முறையே சுகாதாரம் ஆகும்.

பள்ளியில் சுகாதார பாடம் கற்பிக்கப் படுகிறது. ஆசிரியரும் கவலையோடு சுகாதார விதிகளைப் போதிக்கிருர். நகர சபையாரும் சுகாதார முறையைச் செய

லில் செய்து காட்டுகின்றனர். மாணவரும் ஓயாமல் சுகாதார பாடங்களைப் படித்து வருகின்றனர். ஆயினும், நம் நகரங்களில் சுகாதாரம் சரியாக இல்லை. காரணம் என்ன? 'படிப்பது திருவாசகம்—இடிப்பது சிவன் கோவில்' என்றாற்போல, மாணவரே சுகாதார விதிகளின்படி நடப்பதில்லை. படிப்பவரே நடப்பதில்லை எனின், படியாத மக்களைக் குறை கூறுவதில் பயன் உண்டா?

மாணவரே, தம் தம்பியரையும் தங்கையரையும் தெருவில் வீட்டு ஓரங்களில் அசுத்தம் செய்ய விடுகின்றனர்; அவர்களோடு தாமும் பங்கு கொள்கின்றனர்; அவர்கள் தாம் படிக்கும் பள்ளிக்கூடத்தின் நாற்புறமும் அசுத்தம் செய்யத் தவறுவதே இல்லை. அவர்கள் 'வைகறைத் துயில் எழு' என்னும் வாக்கியத்தைப் படித்தனரே தவிர, ஒரு நாளேனும் அதிகாலையில் எழுந்திருப்பதில்லை. இங்ஙனம் மாணவர் சிறு பருவத்திலேயே சுகாதார விதிகளுக்கு நேர்மாறான முறையில் நடப்பதால், படித்தவரும் படியாதவரும் ஒரே நிலையில் சுகாதாரத்தை மறந்து நடக்கின்றனர். இதனால், பல தொத்து நோய்களும், கொள்ளைநோய்களும் மிகுதிப்பட்டு நாளடைவில் அகால மரணம் அதிகமாகிறது.

மாணவரே எதிர் காலச் சமூகத்தின் உயிர் நாடி ஆவர். ஆதலால், நமது சமூகம் நல்ல நிலையில் இருப்பதற்கு அவர்கள் நல்ல நிலையில் இருத்தல்

அவசியம் ஆனது. அவர்கள் சுகாதார விதிகளை இளமை முதலே பழக்கத்தில் கொள்ளுதல் நலம். காலையில் துயிலினின்றும் எழுந்து நடத்தலோ, ஓடுதலோ, வேறு பயிற்சிகளைச் செய்தலோ நல்லது; பிறகு குளிர்ந்த நீரில் நீராடல் வேண்டும். ‘கந்தையானாலும் கசக்கிக் கட்டு’ என்றபடி, தினந்தோறும் தம் ஆடைகளைத் துவைத்தல் நல்லது. ‘கூழானாலும் குளித்துக் குடி’ என்பது ஒரு பழமொழி. ஆதலால், நீராடுதலை நாள்தோறும் சிறந்த கடமையாகக் கைக்கொள்ளுதல் வேண்டும்.

மாணவர் தாம் வசிக்கும் வீட்டையும் தெருவையும் சுத்தமாக வைத்திருத்தல் அவசியமாகும்; தம்மளவில் உடைகளையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்; ஆறிய அல்லது உலர்ந்த அல்லது கெட்டுப்போன பொருள்களைத் தின்னுதல் பெருந்தவறு; பழுக்காத பழங்கள், ஊசிப்போன உணவுப் பண்டங்கள், குறைந்த விலைக்கு விற்கப்படும் தின்பண்டங்கள் முதலியவற்றைக் கண்மூடித்தனமாகச் சாப்பிடுதல் தவறு. வாரத்திற்கு ஒரு முறையோ, இரு முறையோ எண்ணெய் தேய்த்துக் குளித்தல் அவசியம்; தினமும் உணவில் மோரைச் சேர்த்துக் கொள்ளுதல் நலம்.

மாலை வேளைகளில் காற்றோட்டம் உள்ள இடங்களில் ஓடி ஆடுதல் நலம். கை, கால், இடுப்பு, மார்பு, கழுத்து முதலிய உறுப்புகளுக்குப் பலம் தரத்தக்க

உடற் பயிற்சிகளைச் செய்தல் நல்லது. இரவில் அதிக நேரம் விழித்திருத்தல் தவறு. குறித்த நேரத்தில் படுத்து, வைகறையில் எழுதல் உடம்புக்குச் சுறு சுறுப்பை உண்டாக்கும். இரவில் படுக்கும் பொழுதும், காலையில் எழுந்தவுடனும் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவுதல் மிகவும் நல்லது. சூடு உள்ளதும், சத்து உள்ளதும் ஆகிய உணவையே சாப்பிடுதல் வேண்டும். 'அரை வயிறு உண்டி, கால் வயிறு தண்ணீர், கால் வயிறு காற்று உட்கொள்ளுபவர் நோய் அடையார்; நெடுங்காலம் சுகமாக வாழ்வார்,' என்று தமிழ் மருத்துவப் பெரியோர்கள் கூறியுள்ளனர். அதிகமாகக் கீரை வகைகளையும் பழவகைகளையும் உண்ணுதல் நல்லது. குறித்த வேளைகளில் உணவு உண்ணல் மிகவும் அவசியமாகும்.

இந்த விதிகளை நன்கு கவனித்து நடப்பவர் நோய் அடையார்; நெடுங்காலம் சுகமாக வாழ்வர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' அன்றோ?

கேள்விகள்

1. மாணவர்—பொருள் யாது?
2. சுகாதாரம்—யாது?
3. நம் நகரங்கள் எப்படி இருக்கின்றன?
4. 'வைகறைத் துயில் எழு.'—பொருள் யாது?
5. அகால மரணம் எப்படி உண்டாகிறது?
6. மாணவர் கவனிக்க வேண்டுபவை யாவை?

7. எவர் நோய் அடையார்?
8. மருத்துவப் பெரியோர் கூறியுள்ளது யாது?
9. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகள் எவை?

பயிற்சி

1. மாணவர், சுகாதாரம், வைகறை, நோயற்ற, மாறுன—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. காற்றோட்டம்=காற்று+ஓட்டம், மாண்புடைமை=மாண்பு+உடைமை, நோயற்ற=நோய்+அற்ற, குறைவற்ற=குறைவு+அற்ற.—இப்படியே, கூறியுள்ளனர், சுகமாக, சுகாதாரம், நோயின்றி—இவற்றைப் பிரித்துக் காட்டு.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப்படி :—

(1) இந்த—க் கவனித்து——நோய்——.
(2) மாணவர்——தாமும்——கொள்கின்றனர்.
(3) மாணவரே——விதிகளின்படி——.

4. இரண்டாம் பிரிவில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருள் கூறு.
5. அதில் உள்ள மூன்று கால வினைமுற்றுகளைச் சொல்.
6. அதில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.
7. மூன்றும் பிரிவில் உள்ள ஐம்பால் சொற்களைக் கூறு.
8. இரண்டாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்களைக் கூறு.

29. கிராம வாழ்க்கையும் நகர வாழ்க்கையும்

(சம்பாஷணை)

வாழ்க்கை	உள்ளபடி	கொசுக்கடி	ஜனநெருக்கம்
பலசாலி	ஏரைப் பிடித்து	மின்சாரம்	சேர்ந்தாற்போல
குளிர்ந்திருக்கும்	இட்டிலி	பழையது	ஏற்ற
அறியார்கள்	பானங்கள்	சரமாரியாக	அனுபவித்தவன்
அல்லன்	பார்த்தால்தான்	முடிவுக்கு	

கோபாலன்:—கோவிந்தா, எனக்கு நகர வாழ்க்கை சிறிதும் பிடிக்கவேயில்லை!

கோவிந்தன்:—காரணம் என்ன?

கோபாலன்:—நீ படிக்கும் சுகாதார நூல்தான் காரணம். அதில் சொல்லப்பட்டுள்ளபடி நகரத்தில் நல்ல காற்றோட்டம் உள்ள வீடுகள் எத்தனை உண்டு? அவற்றுள் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் கொண்டுள்ள அறைகள் எத்தனை உண்டு? கொசுக்கடி இல்லாத தெருவோ, வீடோ நகரத்தில் உண்டா?

கோவிந்தன்:—நீ கூறுங் குறைகள் கிராமத்தில் இல்லையா?

கோபாலன்:—இல்லை! இல்லை!! அங்கு ஜனநெருக்கம் ஏது? பெரிய தெருக்கள், மூலைக்கொரு வீடு, நல்ல காற்று ஓட்டம் கொண்ட வீடுகள், பெரிய தோட்டங்களைக் கொண்ட வீடுகள், சுத்தமான தெருக்

கள். கிராமக் குழந்தைகள் நகரக் குழந்தைகளைப் போல வீதிகளில் அசுத்தம் செய்வதில்லை.

கோவிந்தன்:—நாங்கள் இங்குச் செய்யும் உடற்பயிற்சி, கிராமத்தில் இல்லை அல்லவா?

கோபாலன்:—பேஷ்! உங்கள் உடற்பயிற்சியைச் சொல்! நாங்கள் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வயலுக்குப் போகிறோம்; நாங்கள் நாள் முழுவதும் ஏரைப் பிடித்து உழுகிறோம். பலர் பலவகைத் தொழில்களைச் செய்கின்றனர்; மாணவர்கள் தோட்ட வேலை செய்கிறார்கள்; அவை உடற்பயிற்சி ஆகாவோ? நீங்கள் எங்களைவிடப் பலசாலிகளாய் இருக்கிறீர்கள் போலும்!

கோவிந்தன்:—கோபாலா, இந்த நகரத்தில் மின்சார விளக்குகளைப் பார்! நமது வீட்டில் மின்சார விசிறியைப் பார்த்தாயா? ஒரு பொத்தானை அழுத்தினால் போதும்: மின்சார விளக்கு எவ்வளவு பிரகாசமாய் எரிகிறது, பார்த்தாயா? இந்தச் சுகம் கிராமத்தில் உண்டா?

கோபாலன்:—போதும்! போதும்!! இதுதான் சுகமோ? உன் மின்சார விசிறியைப் போல ஆயிரம் விசிறிகள் ஏக காலத்தில் சுற்றினாலும், எங்கள் வீட்டெதிரில் உள்ள அரசமரக் காற்றுக்கு ஈடாகுமா? வேப்பமரக் காற்று உடம்புக்கு மிக்க

நன்மையைத் தரத்தக்கது. மின்சார விசிறியின் அடியில் சேர்ந்தாற்போலச் சிறிது நேரம் இருந்தால், தலை வலி வந்துவிடுமே! மின்சார விளக்குகள் ஏற்பட்ட பிறகுதான் உன் போன்ற சிறு பிள்ளைகள் எல்லாம் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளும் பழக்கம் உண்டாகிவிட்டது. இந்தச் செயற்கைச் சிங்காரம் எனக்குப் பிடிக்கவில்லை. கிராமத்தில் உள்ள நாங்கள் காலையில் குளிர்ந்த நீரில் நீராடிப் பழைய உணவை உட்கொள்வோம்; எங்கள் வயிறு குளிர்ந்திருக்கும். இங்கே, காப்பி, தேயிலைப் பானங்கள் முதலியவை உட்கொள்ளுவது வழக்கம் அல்லவா? இவற்றால் உடலுக்கு நன்மை உண்டா? காப்பி, தேயிலை முதலிய பானங்கள் சிறிது நேரமே சுறுசுறுப்பை உண்டாக்கும். உஷ்ணப் பிரதேசத்தில் உள்ள நமக்குக் குளிர்ந்துள்ள 'பழையது' அல்லவா ஏற்ற உணவு? அதை உட்கொள்ளும் கிராமத்தார் 'தலைவலி' என்பது இன்னது என்றுகூட அறியார்களே! காப்பி முதலிய பானங்களைக் கொள்ளும் உங்களுக்குத்தானே நோய்களின் பெயர்கள் யாவும் நன்கு தெரியும்! நீங்கள் இந்த விஷயத்தில் உயர்ந்தவர்களே.

கோவிந்தன் :—கோபாலா, நீ சரமாரியாகப் பேசுகிறாய். நான் கிராம வாழ்க்கையை அனுபவித்தவன் அல்லன். உனது கிராமத்துக்கு வந்து இருந்து பார்த்

தால்தான் நான் ஒரு முடிவுக்கு வரமுடியும். கோடை விடுமுறையில் உனது கிராமத்துக்கு வருவேன்.

கேள்விகள்

1. கிராம வீடு எப்படி இருக்கிறது?
2. நகரத்தில் உள்ள குறைகள் எவை?
3. கிராமத்தார் செய்யும் உடற்பயிற்சி யாது?
4. நகரச் சிறப்பு யாது?
5. 'இதுதான் சுகமோ?—எது?' ஏன் சுகமில்லை? எது சுகம்?
6. கிராமத்தார் காலை உணவு என்ன?
7. நீ எந்த வாழ்க்கையை விரும்புகிறாய்? ஏன்?

பயிற்சி

1. சரமாரியாக - பார்த்தால்தானே - முடிவுக்கு - பலசாலி - உள்ளபடி.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. இப்பாடத்தைச் சம்பாஷணையாக நடித்துக் காட்டு.
3. கிராம வாழ்க்கை - நகர வாழ்க்கை: இவை பற்றித் தனித்தனியே 12 வரிகள் எழுது.
4. காற்று - இடவசதி - உணவு - உடற்பயிற்சி: இவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு கிராமத்தைப்பற்றிச் சிறிய கட்டுரை (வியாசம்) எழுது.
5. அக்குறிப்புகளைக் கொண்டே நகர வாழ்க்கை பற்றிக் கட்டுரை ஒன்று வரை.

30. சுவர்க்க லோக சந்நியாசி

(நாடகம்)

மங்களம்	சுவர்க்கலோகம்	சந்நியாசி	மாறுதல்
பெற்றுவிட்டது	பலமுறை	பொன்மயம்	நம்மவர்
பழக்கமானவர்	தங்கம்	வருத்தப்படு	இழந்து
மதிப்பு இழந்து	உண்மைதாமா	முற்றும்	வரப்போவது
விருப்பம்	சேர்ப்பேன்	நகைத்துக்கொண்டே	ஆபரணம்

இடம் : கிராமத்தில் ஒரு வீட்டுத் திண்ணை.

காலம் : மாலை (சாயங்காலம்)

உறுப்பினர் : மங்களம், தாயார், சந்நியாசி.

[மங்களம் அழுதுகொண்டே திண்ணையில் இருக்கிருள். அடுத்த திண்ணையில் சந்நியாசி அமருகிருர்.]

சந்நியாசி :—ஆ ! என்ன ஆச்சரியம் ! இந்த ஊர் எவ்வளவு மாறுதல் பெற்றுவிட்டது ! நான் சென்ற வருடம் வந்திருந்தபோது இவ்வூர் இப்படி இல்லையே! இப்பொழுது சுவர்க்கலோகம் போலக் காணப்படுகிறதே !

மங்களம் :—ஐயா, நீ சுவர்க்கலோகம் என்று சொன்ணயே, அதைப் பார்த்திருக்கிருயா ?

சந்நியாசி :—ஆம். பார்த்திருக்கிறேன்.

மங்களம் :—ஆ! அப்படியா? அது எப்படி இருக்கும் ? அங்கே யார் இருக்கிருர்கள் ?

சந்நியாசி :—அதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். நான் இப்பொழுதுதான் அங்கிருந்து வந்தேன். அது பொன் மயமானது. அங்கு இருப்பவர் நம்மவரே. அவர்கள் சந்தோஷத்துடன் இருக்கிருர்கள். அவர்கள் துக்கத்தை அறியார்கள் நமக்குப் பழக்கமானவரும் அங்கிருக்கிருர்கள்.

மங்களம் :—அப்படியா! அங்கு என் அக்காளைப் பார்த்தாயா ?

சந்நியாசி :—உன் அக்காள் யார்? அவள் பெயர் என்ன? அவள் அங்கு எப்பொழுது போனுள் ?

மங்களம் :—அவள் பெயர் 'தங்கம்'. அவள் போய் ஒரு வாரம் ஆகிறது.

சந்நியாசி :—(நகைத்துக்கொண்டே) அடடா! தங்கத்தையா சொல்கிருய்! அவளை நன்ருய்த் தெரியுமே. காலையில் வரும்பொழுதுகூட அவளோடு பேசி விட்டு வந்தேன்........ஹூம்......பேசிப் பயன் என்ன ? அவள் மிகவும் வருத்தப்பட்டாள். அவள் நகைகள், துணிகள் எல்லாம் இங்கே இருக்கின்றனவாம். அவை இல்லாமல் அவள் அங்கு மதிப்பு இழந்து அழுகிருள். மற்றப் பெண்கள் எல்லாம் அங்கு அலங்கரித்துக் கொண்டு இருக்கிருர்கள். அவள் மட்டும் ஆபாசமாகக் காணப்படுகிருள். அதுதான் அவளுக்கு வருத்தம். அவள் தாய் அவற்றை அனுப்பாததால் அவள் மிகவும் வருத்தப்படுகிருள்.

மங்களம்:—அப்படியா? (என்று சொல்லிக்கொண்டே உள்ளே ஓடித் தாயாரை அழைத்து வந்தாள்)

தாயார்:—ஐயா, நீங்கள் சொன்னவை எல்லாம் உண்மை தாமா?

சந்நியாசி:—ஆம். முற்றும் உண்மையே. நான் இங்கு வரப் போவதை அறிந்ததும் அவள் என்னை நோக்கி, 'சுவாமி, என் தாயாரைக் கண்டு, என் கவலையைச் சொல்லி, என் ஆடை ஆபரணங்களை வாங்கி வரவேண்டும்' என்று என்னை வேண்டிக் கொண்டாள். உனக்கு விருப்பம் இருந்தால் கொடு. அவளிடம் அவற்றைச் சேர்ப்பேன்.

தாயார்:—ஐயோ! என் மகள் அங்குத் துன்பப்படு கிறாளா! சுவாமி! இந்தப் பெட்டியை அவ ளிடம் கொடுங்கள். இப்பொழுதே புறப்படுங்கள் (பெட்டியைத் தருதல்).

சந்நியாசி:—அம்மா! நீ நல்ல தாயார். உன் விருப்பப் படி இப்பொழுதே போகிறேன்.

(சந்நியாசி நகைத்துக்கொண்டே வேக மாகப் போகிறார்.)

குறிப்பு:—இதுபோன்ற பிற சம்பாஷணைப் பகுதிகளை இவ் வாறே நாடகமாக நடித்துக் காட்டு.

செய்யுட் பகுதி

1. வாக்குண்டாம்

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா:— நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே;— அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் (கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2

அட்டாலும் பால்சுவையில் குன்றா (து) அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ!—கல்தூண்
பிளந்(து)இறுவ(து)அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்? 4

நல்லாரைக் காண்பதுவு நன்றே;— நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவு நன்றே;— நல்லார்
குணங்கள் உரைப்பதுவு நன்றே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவு நன்று. 5

நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 6

பண்டு முளைப்ப(து) அரிசியே ஆனாலும்
விண்(டு) உமிபோனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா(து) அளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். 7

மடல் பெரிது தாழை ; மகிழ் இனிது கந்தம் ;
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல் பெரிது
மண்ணீரும் ஆகா(து); அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 8

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன் நன் மரம். 9

கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

2. நல்வழி

சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ள படி. 1

ஆற்றுப் பெருக்கற்(று)அடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 2

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்!—வேண்டா;
நமக்கும் அதுவழியே; நாம்போம் அளவும்
எமக்கென்னென்(று) இட்டுண் டிரும். 3

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 4

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உலகத்தார் எனவேண்டார்;—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர்; இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம். 5

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்:—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு)ஆரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்? 6

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை. 7

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 8

மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். 9

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன்(று)உண்டாயின்
எல்லாரும் சென்றங்(கு)எதிர்கொள்வர்;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்(று)ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா(து) அவன் வாயில் சொல். 10

3. கண்ணகி

1. காதலன் கோவலன் தான்
கண்ணகி என்பாள் தன்னைக்
கோதறு மனைவி யாகக்
கொண்டுவாழ்ந் திருந்த காலை,
கோதில்மா மதுரை சென்றான்
கொண்டவள் சிலம்பை அங்குத்
தீதற விற்று வந்த
பொருள்கொடு தொழிலைச் செய்ய.

2. அரசிதன் சிலம்பைப் போக்கி
அலைந்துகொண் டிருந்த தட்டான்
வருவதைக் கண்டான்; தான்வைத்
திருந்ததைக் காட்ட, நோக்கி,
'இரு,இவண்' என்று தட்டான்
ஏகினன்; அரசைக் கண்டு,
'திருடிய கள்வன் கண்டேன்;
சிலம்பொடு வந்தான்' என்றான்.

3. உண்மையைத் தேரா வேந்தன்,
உறுமிஏவலரைக் கூவி,
'வன்மனக் கள்வன் தன்னை
வதைத்தபின் நகைகொ ணர்க'

என்றனன்; ஏவ லாளர்
ஏகினர் தட்டா ேனேடே;
கண்டனர் தட்டான் காட்டக்
கோவலன் தன்னை மாதோ.

4. அறிவது சிறிதும் இல்லா
ஏவலர் அவனைக் கொன்றார்;
அறிந்தனள் கணவன் கேட்டைக்
கண்ணகி; அழுது சாம்பி,
அறைந்தனள் பாண்டி யன்முன்
கோவலன் தவறி லாமை;
அறிந்தஅவ் வமயந் தானே
அரசனும் வீழ்ந்தி றந்தான்.

5. பாண்டியன் மனைவி தானும்
பதைத்துமே வீழ்ந்தி றந்தாள்;
காண்தகு மதுரை தன்னைக்
கனல்கொளச் செய்தே, அந்த
மூண்டெழு சினத்தாள் சேரர்
முதுமைசேர் மலைய டைந்து
தாண்டினள் துன்பம்; கோண்கன்
தனைஅடைந் தின்புற் றாளே.

—மா. இராசமாணிக்கம்

அரும்பொருள் விளக்கம்

கோதறு - குற்றமற்ற
இவண் - இவ்விடத்தே
ஏகினன் - சென்றான்
அரசு - அரசன்
உறுமி - சீறி
மாதோ - அசைச்சொல்
சாம்பி - வருந்தி
தவறிலாமை - குற்றமின்மை (யை அறிவித்தாள்)
அறைந்தனள் - எடுத்துச் சொன்னாள், (கண்ணகியின் சிலம்பு இரத்தினங்களையுடையது; அரசியின் சிலம்பு முத்துக்களை யுடையது. இதனைக் கண்ணகி எடுத்துக்காட்ட, அரசன் தான் செய்தது தவறு என்பதை உணர்ந்தான்.)
அமயம் - சமயம்
காண்தகு - பார்க்கத் தக்க
கனல் - நெருப்பு
மூண்டெழு சினத்தாள் - பொங்கி எழுந்த கோபத்தையுடைய கண்ணகி
முதுமைசேர் மலை - மிக்க பழைய மலை.

(அம்மலையுச்சியில் நிற்கையில், அவள் கணவன் தேவ விமானத்தில் வந்து இறங்கி, அவளையும் தேவலோகம் கொண்டு சென்றான் என்பதுவரலாறு ஆதலின், மலையை அடைந்ததும், அவள் துன்பக்கடலைத்தாண்டினாள் என்க.)
கொண்கன் - கணவன்.

4. ஆட்டப் பாடல்கள்

1. ஊஞ்சல் ஆட்டம்

இயமம்வரை படையெடுத்தே இமயத்தில் இலச்சினையை
அமைத்தங்குப் பகைவர்தமை அலைக்கழித்த நெடுஞ்செழியன்
அமைந்தநற் புகழ்பாடி ஆடாமோ ஊசல்!
ஆணழகன் சீர்பாடி ஆடாமோ ஊசல்!

2. பந்தாட்டம்

சீர்குலைந்த சோழநாட்டைச் சீர்ப்படுத்தி ஆண்டநம்
ஆர்அணிந்த அரியபக்தன் அண்ணல் ராஜராஜனே
வார்குழலீர்! 'அவன் வாழ்க' என்றுபந் தடித்துமே!
வாயாரப் புகழ்ந்தவனை வாழ்த்திப்பந் தடித்துமே!

3. அம்மானை ஆட்டம்

டாடா[1]வென் றொருசீமான் தாய்நாட்டுக் கைத்தொழில்கள்
வாடாமற் செய்திட்டார் வளமுற்றார் அம்மானை!
வாடாமற் செய்திட்டார் வளமுற்றார் ஆமாயின்,
நாடாரோ பிறசெல்வர் நாயகர்போல் அம்மானை!
நாடுவர்; நாம் செல்வர்களால் நலம்பெறுவோம் அம்மானை!

—மா. இராசமாணிக்கம்.

1. J. N. Tata என்னும் பாரசீகக் கனவான்.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.